Registered as Newspaper

# உதயன்


பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :62 தை 15ஆம் நாள் புதன்கிழமை 29 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# அரசியல் கைதிகளை பணயம் வைக்கிறது அரசு

## குற்றஞ்சாட்டுகிறது கூட்டமைப்பு




யாழ்ப்பாணம், ஜனவரி 29

தமிழ் அரசியல் கைதிகளை பணயக் கைதிகளாக்கி, அரச படையினர் மீதான எல்லாக் குற்றச்சாட்டு க்களையும் கைவிடச் சொல்லுகின்றன நிலைமையை கோத்தாபய அரசு உருவாக்குகின்றது. இதற்கு ஒரு போதும் இண்ங்க முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06 >

## சர்வதேச விசாரணை முடிந்து விட்டதாம்

### மீண்டும் சுமந்திரன் பிடிவாதம்

யாழ்ப்பாணம், ஜன. 29

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்ற ப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக முழுக்க முழுக்க சர்வதேச ரீதியான விசாரணை நடந்து முடிந்து விட்டது. விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகளே இனி முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 25 >

## விக்னேஸ்வரனோடு கூட்டணி கிடையாது

### ஐங்கரநேசன் உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 29

அரசியல் கூட்டு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பான எனது கருத்து நிலைப்பாட்டின் காரணமாக, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடனான கூட்டணியில் நான் இடம்பெறுவது சாத்தியமற்றதாகவே கருதுகின்றேன். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும், பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் 25 >

## விக்கிக்கு எதிரான விசாரணை மே மாதம்

யாழ்ப்பாணம், ஜன.29

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுத் தொடர்பில் வடக்கு மாகாண முன்னாள் முத லமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உட்பட 4 பிரதிவாதிகளுக்கு எதிராகத் 25 >

## காயங்களுடன் சடலம் மீட்பு

சாவகச்சேரி, ஜன.29

தென்மராட்சி தெற்கு, கோயிலாக்கண்டியில் காயங்களுடன் ஒருவரது சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட் 25 >

## விபத்தில் சிக்கியவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன.29

விபத்தில் சிக்கிக் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பயனின்றி உயி ரிழந்துள்ளார். 06 >

## நீதித்துறைக்குள் கோத்தா மூக்கை நுழைப்பது தவறு

யாழ்ப்பாணம், ஜன. 29

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு, ஜனாதிபதி ஆணைக்குழு ஊடாக சட்ட மா அதிபருக்குப் பரிந்துரையை வழங்கி, சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சுயாதீனத்தில் தலையீடு செய்கின்றது. நீதிமன்றில் நடக்கின்ற வழக்கில் இவ்வாறு செயற்படுவது நீதித்துறையின் சுயாதீனத்தில் மோசமான தலையீடாகவே இருக்கின்றது. ஜனாதிபதி 25 >

**ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை**

சட்டமா அதிபர் சுட்டிக்காட்டு | விரிவு -2 ஆம் பக்கம்

## கோத்தாவின் கருத்துக்கு ஐ.நாவின் பதில் என்ன?

### தமிழ் சிவில் சமூக அமையம் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன.29

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்து விட்டனர் என்று எதனை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச கருத்துத் தெரிவித்துள்ளார் என்பதைத் தமிழ் சிவில் சமூகம் அறிய விரும்புகின்றது. இந்தக் கருத்துத் தொடர்பில் ஐ.நா. சபை மௌனம் காப்பது ஏன்? என்று தமிழ் சிவில் 04 >

## சுதந்திரதினம் துக்கதினம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.29

இலங்கையின் சுதந்திர தினத்தைத் துக்க தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர். அவர்கள் தெரிவித்ததாவது:- 06 >

## சந்நிதிக் கேணிக்குள் விழுந்து ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன.29

தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தீர்த்தக் கேணியில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த க.புவிதரன் (வயது-29) என்பவரே சடல 06 >



# ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சட்டமா அதிபர் டி லிவேரா பதில்

**கொழும்பு, ஜன.28**

**சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கச் சட்டரீதியான எந்த அதிகாரமும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு இல்லை என்று சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.**

தங்களது விசாரணைகள் முடியும் வரையில் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ஒப் தி ப்ளீட் வசந்த கரன்னகொட மற்றும் ரியர் அட்மிரல் டி.கே.பி.தசநாயக்க ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணைகளை இடைநிறுத்த வேண்டும் என்று அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழு சட்டமா அதிபருக்கு அறிவித்திருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சட்டமா அதிபர், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராயும் ஆணைக்குழுவுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்படும் விசாரணை ஆணைக் குழு ஒன்றுக்கு நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் விசாரிக்கப்படும் வழக்கொன்று தொடர்பாக உத்தரவிடும் அதிகாரம் அல்லது அதை இடைநிறுத்தும் அதிகாரம், உரிமை சட்டரீதியாக இல்லை என்று அந்தக் கடிதத்தில் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

# முகக் கவசங்களுக்கு கொழும்பில் தட்டுப்பாடு



கொழும்பு, ஜன. 29

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள அச்சத்தால் மக்கள் அதிகளவில் முகக் கவசங்களை வாங்குவதால், கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் உள்ள மருந்தகங்களில் முகக்கவசங்களுக்குக் கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக முகக்கவசங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி, டொக்டர் கமல் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பாதித்ததாக சந்தேகிக்கப்படும் பல நோயாளிகள் அங்கொடவில் உள்ள ஐ.டி.எச் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு வருவதனால், முகக் கவசங்களுக்கான தேவை கடந்த இரண்டு நாள்களில் அதிகரித்துள்ளது.

சீன சுற்றுலாப் பயணி ஒருவருக்கு நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் ஏற்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், மக்கள் முகக் கவசங்களை வாங்க மருந்தகங்களுக்கு விரைகிறார்கள், ஆனால் கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள பெரும்பாலான மருந்தகங்களில் இந்த தட்டுப்பாடு நிலவுகின்றது. (ம)

# ஹெரோயின் வைத்திருந்த 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன.29

தெல்லிப்பளை, வித்தகபுரத்தில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று மாலை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறைப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சி.டபிள்யூ. சேனாதீரவால் அமைக்கப்பட்ட சிறப்புப் பொலிஸ் குழுவே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், போதைப்பொருளைப் பொதியிட்டுக் கொண்டிருந்த நிலையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 5 கிராம் 6 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும், கைது செய்யப்பட்டவர்களின் இரு ஆண்களும், இரு பெண்களும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களின் இருவர் கணவன், மனைவி என்றும் அவர்கள் 30 மற்றும் 25 வயதுடையவர்கள் என்றும் தெரிவித்த பொலிஸார், இவர்கள் கொழும்பு, மோதறையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர். ஏனைய இருவரில் 40 மற்றும் 36 வயதுடைய ஆணும், பெண்ணும் அடங்குகின்றனர் என்றும் அவர்கள் வித்தகபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26-105)

# பொலிஸாருக்கு டிமிக்கி காட்டியவரால் விபத்து

## 3 பேர் மருத்துவமனையில்

கிளிநொச்சி, ஜன.29

பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற சந்தேகநபரால் ஏற்படுத்தப்பட்ட விபத்தில் சிக்கி பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 3 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று கிளிநொச்சி 55ஆம் கட்டைப் பகுதியில் நடந்துள்ளது.

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் கை விலங்கிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மோட்டார் சைக்கிளில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

திடீரென அவர் பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

அப்போது மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து பாதசாரி ஒருவர் மீது மோதியது. அதில் பாதசாரி காயமடைந்தார். காயமடைந்த பாதசாரி 17 வயதுடையவர் என்றும், தொழிற் பயிற்சி அதிகார சபையில் கற்கும் மாணவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு இந்த விபத்தில் சந்தேகநபரும், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரும் காயமடைந்தனர். சந்தேகநபருக்கு காலில் முறிவு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

காயமடைந்த மூவரும் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-6)

## கொரோனா வைரஸ் தொற்று

# சிகிச்சை வழங்குவோருக்கு வேண்டும் ஊக்கத்தொகை!

கொழும்பு, ஜன. 29

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கு ஊக்கத்தொகையை வழங்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ஊடக சந்திப்பில் பேசிய அந்தச் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே, வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் போது மருத்துவ ஊழியர்கள் எதிர்கொள்ளும் அபாயத்தை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

இலங்கையில் முதல் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ள ஒரு சீனப் பெண், தொற்று நோய்த்தொற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம)

# சொற்பொழிவு

சுன்னாகம்,ஜன.29

மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவுகள், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை முற்பகல் 11 மணிக்கு ஆலயப் பிரதான மண்டபத்தில் ஆற்றப்படும். (க)

# சட்ட வைத்திய அதிகாரியிடம் இந்திய மீனவர்கள்

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களைக் கடற்படையினர் அரச சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைகளுக்கு உட்படுத்தி அறிக்கை பெற்றுக் கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 11 பேரையும் யாழ்ப்பாணம் நீரியல்வளத் துறை அதிகாரிகளிடம் கையளிக்க முன்னர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரியிடம் கடற்படையினர் முற்படுத்தினர். சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனை அறிக்கையைப் பெற்ற பின்னரே அவர்கள் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் இருந்து விடுவிக்கப் படும்போது, இலங்கைக் கடற்படையினர் தம்மைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டுகின்றனர். கடற்படை மருத்துவர்களே தம்மைப் பரிசோதிக்கின்றனர் என்றும் கூறுகின்றனர். இந்தச் சிக்கலைத் தவிர்க்கும் நோக்கில் அவர்கள் அரச சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்துப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-105)

# பிணைமுறி மோசடி: 18, 19 இல் விவாதம்

கொழும்பு, ஜன.29

**மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குறித்த திறைசேரி முறிகள் தொடர்பான தடயவியல் கணக்காய்வு அறிக்கை மீதான இரு நாள்கள் விவாதம் அடுத்த மாதம் 18ஆம் ,19 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.**

**மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த திறைசேரி முறிகள் தொடர்பான தடயவியல் கணக்காய்வு அறிக்கை கடந்த வாரம் மத்திய வங்கியால் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் சபாநாயகர் கரு ஜயசூரிய தடயவியல் கணக்கறிக்கையை சபையில் சமர்பிக்காது இருந்தார்.**

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்சியாக இது தொடர்பாகக் கேள்வி எழுப்பிய நிலையில் கணக்காய்வு அறிக்கையில் இணைப்புகள் இல்லாத அறிக்கையைச் சபைப்படுத்திய நிலையில் அது குறித்து எதிர்க்கட்சியினர் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர்.

தடயவியல் கணக்கறிக்கையின் ஆங்கிலப் பிரதி உள்ள நிலையில் தமிழ்மற்றும்சிங்களப் பிரதிகளைக் கேட்டுள்ள நிலையில் அதனை விவாதத்துக்கு முதல் சபையில் சமர்ப்பிக்கவும் எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ள நிலையில் அதற்கு முன்னர் ஆங்கிலப் பிரதிகளை சபைப்படுத்தவும் சபாநாயகர் அறிவுரை வழங்கியுள்ளார்.

எவ்வாறு இருப்பினும் எதிர்வரும் 18ஆம்,19ஆம் திகதிகளில் மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த திறைசேரி முறிகள் தொடர்பான தடயவியல் கணக்காய்வு அறிக்கை மீதான இரு நாள்கள் விவாதம் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-22)

## வெளிநாட்டிலிருந்து வந்தவருக்கு "கொரோனா" பரிசோதனை

முல்லைத்தீவு, ஜன.29

வெளிநாட்டில் இருந்து வந்த முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து அவருக்கு "கொரோனா" வைரஸ் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பரிசோதனைகளில் அவருக்கு "கொரோனோ" வைரஸ் தொற்று இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஹொலன்டில் இருந்து கடந்தவாரம் ஒருவர் முல்லைத்தீவு வந்திருந்தார். இவரது விமானப் பயணத்தின்போது சீன நாட்டவர்களும் இருந்துள்ளனர்.

முல்லைத்தீவுக்கு வந்தபின்னர் அவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார். அவர் தனியார் மருத்துவமனை ஒன்றுக்குச் சென்று சிகிச்சை பெற்ற நிலையில். பின்னர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

"கொரோனா" வைரஸ் தொற்றுக்குரிய அறிகுறிகள் அவரிடம் காணப்பட்டதையடுத்து அவரது மாதிரிகள் களனி ஐ.டி.எச். மருத்துவமனைக்குப் பரிசோதனைக்காக அனுப்பட்டது. அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவருக்கு "கொரோனா" வைரஸ் தொற்று இல்லை என்பது கண்டறியப்பட்டது.

பொதுமக்கள் இந்த வைரஸ் தொற்றுத் தொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும். ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனைகளை நாடி மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு மருத்துவ அதிகாரி விஜிதரன் தெரிவித்தார். (எ-19)

## பதுளையில் தமிழ்ப் பெண் கழுத்தறுத்துப் படுகொலை!

கொழும்பு. ஜன.29

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கயிலகொட பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றுக்குள் நேற்று நுழைந்த சிலர் வீட்டிலிருந்த தமிழ்ப் பெண்ணைக் கத்தியால் கழுத்தறுத்துப் படுகொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முகமூடி அணிந்துகொண்ட சிலர் குறித்த வீட்டிலிருந்து ஓடி வருவதை அயல் வீட்டில் இருந்த பெண் ஒருவர் பார்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 48 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான அ.கௌரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முகமூடி அணிந்த மூன்று நபர்கள் வீட்டுக்குள் நுழைந்து அவரைக் கொலை செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் இடம்பெற்ற வேளையில் வீட்டில் பெண் தனியாக இருந்துள்ளார் என பொலிஸாரின் முதல்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. கொள்ளை முயற்சியின் போது இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-22)



MASSIVE
VEHICLES
AUCTION SALE



06th of February
LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM
VAVUNIYA
Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81
On View – 03rd & 05th February
(Please refer the Udayan On 03rd of February 2020
For the Full List Of Vehicles)
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 128 Years of Service Excellence.

## கோத்தாவின்...

சமூக அமையம் கேள்வி எழுப்பியுள்ளது.

அந்த அமையம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

இதே போன்று பொறுப்பற்ற விதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் 2016ஆம் ஆண்டு கருத்து தெரிவித்திருந்தாலும் போரின் இறுதி அங்கத்தின்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி அவ்வாறானவோர் கருத்தை கூறும் போது அது தரவுகளின் அடிப்படையிலானதாக அமையலாம் என ஊகிக்க இடமுண்டு. அப்படியெனில் போரின் இறுதி நாள்களில் (தற்போதைய இராணுவத் தளபதி) லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவின் 58ஆவது படையணியிடம் சரணடைந்தவர்கள். சரண் அடைந்ததன் பின்னர் கொல்லப்பட்டார்கள் என சனாதிபதி உறுதிப்படுத்துகிறாரா என்ற கேள்வி எழுகின்றது.

இறுதிப் போரில் முக்கிய பிரிவு ஒன்றுக்கு (53ஆவது படையணி) தலைமை ஏற்றிருந்தவரும் தற்போதைய பாதுகாப்பு செயலாளருமான மேஜர் ஜெனரல் கமால் குணரெத்தினவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் சரணடைந்தவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள்.

ஜனாதிபதி ராஜபக்சவின் இந்தக் கருத்து முழுமையானவோர் உண்மை அல்ல என்ற விடயத்துக்கு அப்பால் விடுதலைப் புலிகளால் வலுக்கட்டாயமாக படையில் சேர்க்கப்பட்டவர்கள் சரணடைவின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டு இறந்து விட்டார்கள் என்பது எந்த விதத்தில் நியாயப்படுத்தக் கூடியது என்ற கேள்வி எழுகின்றது.

எந்த வகையில் அவ்வாறு அவர்கள் கொலை செய்யப்பட்டது போர் நெறிமுறைகளுக்கும் சட்டங்களுக்கும் இலங்கை அரசமைப்பில் விதந்துரைக்கப்படும் நீதிச் செயன்முறைக்கும் ஏற்புடையது என்ற கேள்விகள் எழுகின்றன.

விசாரணைகளின் பின்னர் இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும் என்ற கூற்று நம்பிக்கை ஏற்படுத்தக் கூடியதல்ல. விசாரணை என்பதன் மூலம் ஜனாதிபதி கூற வருவது யாது? அனைவரும் இறந்து விட்டார்கள் என பொத்தம் பொதுவாக முடிவெடுத்து விட்டு அதனை நியாயப்படுத்தியும் விட்டு பின்னர் விசாரணை நடத்துவோம் என்று கூறுவது வேடிக்கையானது. ஜெனீவா செயன்முறைகளுக்கு கணக்கு காட்டுவதற்காக உருவாக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் முடக்கப்படும் என்ற செய்திகள் நிலைமையின் மோசகரமான நிலையை எடுத்து இயம்புகின்றன.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நாம் பொருளாதார உதவியை வழங்குவோம் என்று கூறுவதன் மூலம் பொருளாதாரப் பிழைத்தலுக்கும் தமது உறவுகளை தேடி அறிதலுக்கும் இடையில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்யுங்கள் என்று அரசு கூறுவது கொடுமையானது. பொருளாதார நலிவுற்ற மக்கள் தமது உரிமையை கேட்கக் கூடாது என்பது ஜனநாயக விரோதமானது என்பதோடு அவர்களின் சுய கௌரவத்தை இழிவுபடுத்துவதுமாகும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கருத்துக்களுக்கு ஐ. நாவின் பதிலென்ன என்ற கேள்வி எழுகின்றது. 20082009 இல் இலங்கையில் ஐ.நாவின் செயற்பாடுகள் தொடர்பில் செயலாளர் நாயகம் பான் கி மூனால் கோரப்பட்டிருந்த சார்ள்ஸ் பெற்றியின் அறிக்கையின் முடிவுகளை நாம் ஐ.நாவுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். தொடர்ச்சியான அமைதி, உடனடி துலங்களின்மை போன்றவற்றால் இலங்கையில் ஐ.நா கட்டமைக்கப்பட்ட ஓர் நிறுவனம் சார் தோல்வியயை சந்தித்ததாக சார்ள்ஸ் பெட்ரி தனது அறிக்கையில் 2012இல் குறிப்பிட்டுருந்தார். அந்த அறிக்கையில் இருந்து ஐ.நா பாடம் படித்திருந்தால் ஜனாதிபதி ராஜபக்சவின் நிலைப்பாட்டுக்கு காத்திரமான ஒரு பதிலை வழங்கியிருக்க வேண்டும். காலம் தாழ்த்தியேனும் அது நடக்க வேண்டுமென நாம் உரிய தரப்புக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர்களின் நீதிக்கும் பொறுப்புக் கூறலுக்குமான போராட்டத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் ஆணிவேராகும். இந்த நேரத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு நாம் வலிமை சேர்ப்பது அவசியமாகும். என்றுள்ளது. (எ)

SPECIAL SCHOLARSHIP FOR SRI LANKA STUDENTS
இலங்கை மாணவர்களுக்கான விசேட புலமைப்பரிசில்
INDIA EDUCATION FAIR 2020
WORLD CLASS EDUCATION AT AFFORDABLE COST
குறைவான கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த கல்வி
THE VALAMPURI HOTEL, JAFFNA
29th & 30th JANUARY, 2020
Wed & Thu, 10 am to 5 pm



Study in INDIA
ENTRY FREE
COLOMBO : The Kingsbury Hotel ▸ 1st & 2nd February, 2020
Supported by In Association Online Partner Event Managed by

பணிப்பெண் தேவை
மாங்குளத்தில் உள்ள வயோதிபப் பெண்ணை வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப்பெண்தேவை. தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும் சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
076 396 8443



ஏழாலை தெற்கு களபாவோடை
அருள்மிகு வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்
கொடியேற்ற உற்சவம்
31.01.2020 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி மு.ப 10.00 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெறும்.
இரதோற்சவம்
08.02.2020 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.
தீர்த்தோற்சவம்
09.02.2020 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.
-தேவஸ்தானம்-

STUDY , WORK & SETTLE IN
CANADA
GERMANY
FRANCE
LATVIA
EUROPE
BUSINESS ADMINISTRATION
JOURNALISM & MEDIA
HUMAN RESOURCES
TOURISM & HOSPITALITY
BANK BALANCE
(NO IELTS)
SCHENGAN VISA
FULL IN ENGLISH MEDIUM
ROYAL EDUCATION SERVICE 0777 911 649 / 0777 216 291
128 JAMPETTAH STREET, COLOMBO 13



# கொரோனாவை எதிர்கொள்ள 8 வைத்தியசாலைகள் தயார்!

**கொழும்பு, ஜன. 29**

**கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் என சந்தேககிக்கப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க நாடு முழுவதிலும் உள்ள எட்டு வைத்தியாலைகளில் தனிமைப்படுத்தப்பட்ட அறைகளை வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது.**

இதன்படி கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களுக்குச் சிகிச்சையளிக்க, கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலை, நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை (களுபோவில), கொழும்பு வடக்கு போதனா வைத்தியாலை (றாகமை), கண்டி தேசிய வைத்தியசாலை, பதுளை பொது வைத்தியசாலை ஆகியன தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

இது தவிர மேலும் மூன்று வைத்திசாலைகளின் பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன.

அத்துடன் தற்போது கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலை இதற்காக சிகிச்சைகளை மேற்கொள்ள முழுமையான தனிப்படுத்தப்பட்ட அறைகளைக் கொண்டுள்ளது. (ம)





## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் நாளை வியாழக்கிழமை ஏற்றப்படவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11மணிவரை ஜஸ்பிளாண்ட் வீதியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை குருநகர் சனசமூக நிலையம் முன்பாகவும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரையும் கடற்கரை வீதி முதலாம் குறுக்குத்தெரு வீதியிலும் தடுப்பூசி போடப்படும்.

எனவே ஒவ்வொருவரும் தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. உரிமக்கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

## மணவாள கோல விழா

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை பகவதி மாரியம்மன் கோவில் கும்பாபிசேக தின மணவாளக் கோல விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மதியம் 12 மணிக்கு அன்னதானம் நடைபெறும். மாலை 6 மணிக்கு பகவதி மாரியம்பாள் அலங்காரத்துடன் சிங்க வாகனத்தில் தெரு வீதி உலா வரும் காட்சி இடம்பெறும்.

இந்த தெருவீதி உலா ஓடை ஒழுங்கை, ஐயனார் வீதி, தட்டாதெரு, கே.கே.எஸ் வீதி, ஓட்டுமடம் வீதி வழியாக கோயிலை வந்தடையும் என்று ஆலய அறங்காவலர் அறிவித்துள்ளார். (ஐ)



## சீனர்களுக்கு தடை!

கொழும்பு, ஜன. 29

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சீனாவிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான வருகை நுழைவிசைவுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. சீனாவில் தாக்கம் ஏற்படுத்தியுள்ள கோரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இந்த அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. கொழும்பு நோயியல் வைத்தியசாலையில் சீன நாட்டுப் பெண் ஒருவர் கோரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியமை நேற்று முன்தினம் மாலை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து அவசர நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுத்துள்ளது. அத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் பயணிகள் தவிர்ந்த பார்வையாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஏல விற்பனை

சாவகச்சேரி, ஜன. 29

சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குகளின் சான்றுப் பொருள்களாக சமர்ப்பிக்கப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

மணல், மண்வெட்டி, சவள், பித்தளை மற்றும். இரும்புப் பொருள்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும். எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில், பகிரங்க ஏல விற்பனை நடைபெறும் என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (க-9)

## ஷானிக்கு வாகனம் வழங்கிய பொலிஸ் அதிகாரிக்கு சிக்கல்

கொழும்பு, ஜன. 29


பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள முன்னாள் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஷானி அபேசேகர பயணம்செய்ய, பொலிஸ்திணைக்களத்தின் வாகனமொன்றை வழங்கிய பொலிஸ் உயரதிகாரியை விசாரணைக்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பல முக்கிய வழக்குகளை விசாரித்து உண்மைத்தன்மைகளை வெளிக்கொணர்வதில் ஷானி முக்கிய பங்கு வகித்திருந்தார். எனினும், ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபய வெற்றியீட்டியதும், முதலாவது நடவடிக்கையாக ஷானியை பதவிநீக்கி, அவரை தென்மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக நியமித்தார். இது பழிவாங்கும் நடவடிக்கையென பரவலான விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில், ரஞ்சனின் குரல்பதிவைக் காரணம் காட்டி ஷானி கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

தற்போது, ஷானியின் வாகன போக்குவரத்து விவகாரம் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. ஷானிக்கு வாகனத்தைக் கொடுத்த பொலிஸ் அதிகாரி, சிசிரிவி காட்சிகளின் அடிப்படையில் விசாரணையை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## மருத்துவமனை மாடியால் குதித்து ஒருவர் தற்கொலை

யாழ்ப்பாணம், ஜன. 29



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பத் தலைவர் ஒருவர் மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை, கருணைபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை பிள்ளையான் (வயது 64) என்பவரே இவ்வாறு குதித்து தற்கொலை செய்தவராவார். இவர் கடந்த ஒன்பது வருடங்களாகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து சிகிச்சைபெற்று வந்துள்ளார் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இறப்பு விசாரணைகளைத் தொடர்ந்து சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் உடற்கூற்றுப் பரிசோதனை அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-22)

## விபத்தில்...

முல்லைத்தீவு, அளம்பில், தங்கபுரத்தைச் சேர்ந்த மனுவல் பொன்னாந்து நெபுல் நெல்சன் (வயது-37) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.
இவர் கடந்த 18ஆம் திகதி கொக்குளாய், 17ஆம் கட்டையில் விபத்துக்குள்ளாகியுள்ளார். மோட்டார் சைக்கிளில் மற்றொருவருடன் பின்னிருக்கையில் இருந்த பயணித்தபோது வீதியின் குறுக்கே ஓடிய பன்றியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். அதில் இவர் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார்.
மந்திகை மருத்துவமனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## அரசியல்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கோத்தாபய ராஜபக் ஷ அரசு, தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரை மன்னிப்பளித்து விடுதலை செய்வதை ஏற்க முடியாது. தமிழ் அரசியல் கைதிகளை பணயக் கைதிகளாக வைத்து, அரச தரப்பின் மீதான எல்லாக் குற்றங்களையும் கைவிடுமாறு கோருவதற்கு அரசு முயல்கின்றது. இதனை ஏற்க முடியாது.
தமிழ் அரசியல் கைதிகள் ஏற்கனவே சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள். பாதுகாப்புத் தரப்பினர் குற்றவாளிகள் யாரென்றே அடையாளப்படுத்தப்பட்டு தண்டனை அனுபவிக்காதவர்கள். இரண்டு தரப்பினரையும் ஒரே பொறிமுறையில் மன்னிப்பளித்து விடுவிப்பதாகக் கூறுவதை ஏற்க முடியாது. கோத்தாபய ராஜபக் ஷ இவ்வாறுதான் நடப்பார் என்று நாங்கள் முன்னரே எதிர்பார்த்ததுதான் -என்றார். (ஓ,5)

## சுதந்திர...

இறுதிப் போரில் கையளிக்கப்பட்ட எமது பிள்ளைகள் தொடர்பாக அரசு அக்கறை செலுத்தாத நிலையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு அரசு தயாராகி வருகின்றது.
சுதந்திர தினத்தன்று துக்க தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும், அன்றைய தினம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக நடக்கவுள்ள போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
அன்றைய தினம் வடக்கிலும், கிழக்கிலும் சமநேரத்தில் போராட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன- என்றனர். (எ-6-214)

## சந்நிதிக்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்றுக் காலை ஆலயத்துக்கு வந்தவர்கள் தீர்த்தக் கேணியில் சடலம் மிதப்பதைக் கண்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.
பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை மீட்டு மந்திகை மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.
நேற்றுக் காலை யாரும் இல்லாத நிலையில் வலிப்பு ஏற்பட்டுத் தீர்த்தக் கேணியில் அவர் விழுந்தமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-26,20)

## மரண அறிவித்தல்




### திருமதி சசிகலா புவனதயாபரன்

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிகலா புவனதயாபரன் நேற்று (28.01.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் பாலசுப்பிரமணியம் நகுலேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசா புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் புவன தயாபரனின் அன்பு மனைவியும் விபூஷணி (லண்டன்), சுகிர்தினி (பளை Pre School) ஆகி யோரின் பாசமிகு தாயாரும் ஆதுலனின் (லண்டன்) மாமியும், டிலானியின் (லண்டன்) பேர்த்தியும் சந்திரகலா (ஜேர்மன்), பரமசிவம், பரமேந் திரன் (கனடா), லதிகலா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற புவனராசன் மற்றும் பத்மதேவியின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2020) புதன் கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

வவுணாவத்தை,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 26 |
| 12 | 01 |
| 1957 | 2020 |

### சிதம்பரநாதன் வேலுப்பிள்ளை

யாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் வேலுப்பிள்ளை அவர்கள் கடந்த **(26-01-2020)** ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் - தவமணி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- பூபதிதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும், மஜீகரன்(ரமேஷ்- பிரான்ஸ்), மாதுரி(சுவிஸ்), மகிந்தன், மதுசன், மதுஜனா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌதமன்(பாபு- சுவிஸ்), விஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தனபாலசிங்கம்(இலங்கை), காலஞ்சென்ற தயாபரன், மற்றும் தயாநிதி (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லட்சுமிதேவி (இலங்கை), மகேந்திரகுமார்(கனடா), ஈஸ்வரன்(டென்மார்க்), மகேஸ்வரன்(கொலண்ட்), காலஞ்சென்ற விஜயகுமார்(பிரான்ஸ்), மற்றும் சந்திரகுமார்(கனடா), கெங்காதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரமானந்தம்(இலங்கை), புஷ்பம்(கனடா), கமலாதேவி(டென்மார்க்), விஜி(கனடா), தபோதினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு உடன் பிறவாச் சகோதரரும், அக்ஷரா, அக்ஸ்மியா(பிரான்ஸ்), அக்ஷிகா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(30.01.2020)** வியாழக்கிழமை நண்பகல் **12** மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் **3** மணியளவில் வவுனியா கருப்பனிச்சங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**

**தொடர்புகளுக்கு: மயூரி - மகள் Mobile : +41765813317,**
**பாபு-மருமகன் Mobile:+41763355764, ரமேஷ்-மகன் Mobile:+33663300835**
**விஜிதா-மருமகள்Mobile:+33658763409, மகிந்தன்-மகன்Mobile:+94774825047**
**தயாநிதி - சகோதரி Mobile:+31640252736**

## விழிநீர் அஞ்சலி

தெல்லிப்பளை கோட்டக் கல்வி பணிப்பாளர்
**மாணிக்கம் ஆனந்தகுமார்**
அவர்கள் கடந்த (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.



**பாடசாலைச்சமூகம்**
**யா/ அருணோதயாக்கல்லூரி, அளவெட்டி**

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை புலேந்திரநாதன்



ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை புலேந்திரநாதன் (இந்திரன்) நேற்று **(28.01.2020)** செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மோகனலீலாவின் கணவரும் சந்திரன், ரூபன், பரமேஸ்வரன், கலாஜினி, ரூபினி காலஞ்சென்றவர்களான மாலினி, கிருபாகரன், நந்தினி, மோகன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காந்திமதி, ராசமலர், விஜயா, ரேகா, யாழினி, சுரேந்திரன், லிங்கம் மற்றும் இரத்தினபூபதி, இந்திரலீலா, சிவசுப்பிரமணியம் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், பரமநாதன், சகுந்தலா ஆகியோரின் மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(29.01.2020)** புதன்கிழமை பிற்பகல் **2.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக "இணுவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் கிழக்கு,**
**காரைக்கால் சிவன்கோவிலடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:- 077 812 4480**


**பகுதிநேர வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு கணக்கியல் படித்துக் கொண்டிருக்கும் பல்கலைக்கழக வெளியூர் மாணவர்களை எதிர்பார்க்கின்றோம். தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
**077 722 2715**

**தவறிவிட்டது**
வாகன இலக்கம் WPLW1993 இலக்க முன்தகடு KKSவீதி தெல்லிப்பளைக்கும், யாழ்ப் பாணத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிழுந் துள்ளது.இதனை கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள வும். **தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**
**077 670 1348, 077 184 3030**

**வேலையாள்கள் தேவை**
திருநெல்வேலியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு உணவு விநியோகம் (Delivery) செய்வதற்கு சாரதி அனுமதிப்பத்திரமும் மோட்டார் சைக்கிளும் உடைய (பெண்கள்) வேலையாள்களும் Cleaning வேலை செய்யக்கூடிய ஆண்.பெண் (இருபாலாரும்) தேவை.
**075 033 7588**

**வேலையாள் தேவை**
**யாழ்ப்பாணத்தில் இயங்கும் விடுதி ஒன்றிற்கு முகாமையாளர், சுத்திகரிப் பாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சாரதி ஆகியோர் தேவை.**
**077 366 1681**

## மரண அறிவித்தல்



## முருகேசு பாலசிங்கம்

கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பாலசிங்கம் கடந்த (27.01.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்ற சபாபதி தெய்வானையின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் சிவக்கொழுந்து, மார்க்கண்டு (கந்தசாமி), இரத்தினசிங்கம் (இலங்கை மின்சாரசபை) கனகசிங்கம் (நோர்வே) ஆகியோரின் அன்புச்சகோதரனும் பகீரதன், (பிரான்ஸ்), ரேணுகா (ஆசிரியை, யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம்), சிந்துஜா (பிரான்ஸ்), விதுசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரந்தாமன் (பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி) ஜெயந்தினி (பிரான்ஸ்), தர்மசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜிதன், சாத்விகன், சாத்விகா, லக்சிகா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(30.01.2020)** வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக சோனப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
077 850 7220

## மரண அறிவித்தல்

தோற்றம்
16
...
09
...
1923



மறைவு
28
...
01
...
2020

## செல்லப்பா செல்லையா

குருணாகலை பிறப்பிடமாகவும், நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் புகையிரத ஊழியரான செல்லப்பா செல்லையா நேற்று **(28.01.2020)** செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான ஏரம்பு, மாரிமுத்து தம்பதிகளின் பாசத்திற்குரிய மருமகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், முருகேசு, கந்தசாமி மற்றும் முத்துமணி, இலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சந்திரன் மற்றும் கணேஸ் வரி (கிளி), காலஞ்சென்ற கணேசு மற்றும் இராசேந்திரம் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), அருட்கண்ணன் (இந்திரா), செல்வராணி (ராணி) ஆகி யோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான அன்னலீலா (லீலா), சக்திவடிவேல் (வடிவேலு) மற்றும் ஜெகதாம்பிகை (ஆத்தை), லிங்கேஸ்வரி (லிங்கம்), ஈஸ்வரி (கலா), அருட்செல்வம் (பெரியதம்பி) ஆகியோரின் மரியாதைக் குரிய மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(29.01.2020)** புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் **12.00** மணியளவில் தகனக்கிரியை களுக்காக ஆரியம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அருளானந்தம் சத்தியநேசன்



சென்தோமஸ் ஒழுங்கை, பருத்தித் துறையை பிறப்பிடமாகவும், கொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் சத்திய நேசன் கடந்த **(23.01.2020)** வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை அருளானந்தம்- அக்னஸ் தம்பதியரின் மகனும் அருள்நேசன், காலஞ்சென்ற ஜெப நேசன், அருட்பணி ஞானநேசன் (நற்கருணை நாதர்சபை), இதய நேசன் (கனடா), அருள்சாந்தி (கனடா), அருள்ஜெயந்தி (லண்டன்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு **31.01.2020** அன்று
**Begraafplaats Westduin**
**Wijndealersingel 3**
**2553 AC Denhaag**
**Netherland** இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: தொடர்பிற்கு

அருட்பணி ஞானநேசன்- (+9477 9707 933), அருள்நேசன்- (9477 8734 932)
அதயநேசன்- (1647 8479827), அருள்சாந்தி- (1289 2321230)
அருள்ஜேந்தி- (4479 4626 9921)

### திருமதி அஞ்சலா றுக்குமணி (றுக்கி) அருளானந்தம்



சென்தோமஸ் ஒழுங்கை, பருத்தித்- துறையை பிறப்பிடமாகவும், ஜேர் மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அஞ்சலா றுக்குமணி (றுக்கி) அருளானந்தம் கடந்த **(22.01.2020)** புதன்கிழமை ஜேர்மனியில் கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றோமானிஸ் - றோசம்மா தம்பதிகளின் மகளும் அருளானந்தத்தின் மனைவி யும் ஜேர்மனியை வதிவிடமாக கொண்ட வர்களான அருள்தேவி, அருள்தாசன், அருள்மதி, அருள்நிமலன்., அருள்நியூ மன் மற்றும் அருள் நியூட்டன் ஆகி யோரின் அன்பு தாயாரும் சுதர்சன், சத்தியநேசன், பிறேமினி, சுலக்சனா, எலிசபெத், ஆஞ்சா ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு **31.01.2020** வெள்ளிக்கிழமை
**Krumbacherstr. 2**
**87727 Babenhausen**
**Germany** இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: தொடர்பிற்கு

இதயநேசன் (+4676-5688504), நிமலன் - (0049 1705 352437),
நியூமன் - (0049 1514 1635577), நியூட்டன்- (0049 1525 8724666),
தேவி- (0049 1575 6355388), மதி- (0049 8333 4808038),
தாசன்- (0049 6203 402778), அருளானந்தம்- (0049 8333 4809437)

**இவர்களின் ஆத்ம இளைப்பாற்றிக்காக வருகின்ற (31.01.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெறும்.**

## இசைக்கருவி வகுப்புக்கள்

புதிய பிரிவு ஆரம்பம்
08.02.2020 சனிக்கிழமை மு.ப.10.00 மணி

ஓகன், மிருதங்கம், கிற்றார்

தொடர்பு: V2 C Club தொடர்பகம்
வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி
077 151 5145

(es.30646) (13.17)

## வீடு வாடகைக்கு

யாழ். மணிக்கூட்டு கோபுர வீதியில்
மணிக்கூண்டு கோபுரத்திற்கு அருகில்
மூன்று அறைகளுடன் முற்றிலும்
புதிதாக வடிவமைக்கப்பட்ட
வீடு வாடகைக்கு உண்டு.
கார் நிறுத்தும் வசதி கிடையாது.
அலுவலகங்களுக்கும் உகந்தது.
076 013 5439

(es.30666) (13.17)

## Accounts Clerk தேவை

இல. 395, Kandy Road,
Mampalam Junction இல்
அமைந்துள்ள தனியார் நிறுவனம்
ஒன்றிற்கு (Koolair Northern
Engineering (Pvt) Ltd.)
ஆங்கிலம் தெரிந்த பெண்
Accounts Clerk தேவை.
077 415 8046

## மரண அறிவித்தல்

### சடாச்சரம் கமலேஸ்வரி



இடைக்காட்டை பிறப்பிடமாக கொண்ட சடாச்சரம் கமலேஸ்வரி நேற்று **(28.01.2020)** செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(29.01.2020)** புதன்கிழமை பிற்பகல் **2.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு சாமித்திடல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 3141 916 — தகவல்: குடும்பத்தினர்.

E,S Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## தேவை

மில் வேலை தெரிந்தவர்கள், பொதி செய்யக் கூடியவர்கள் தேவை.
[சாப்பாட்டுடன் தங்குமிட வசதி உண்டு]
தொடர்பு: 077 7722 215

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 04 . 1936



இறப்பு 27 . 01 . 2020

திருமதி
### ராசமணி கதிர்காமநாதன்

யாழ். அளவெட்டி தெற்கு பெருமாக்கடலையை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ராசமணி கதிர்காமநாதன் 27.01.2020 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிர்காமநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலமணி, நேசமணி, மாணிக்கவாசகர், மற்றும் சரவணபவன், விஜயமணி, சாம்பவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சிவசுந்தரம், மற்றும் காசிநாதன் பத்மாதேவி, ஸ்ரீதேவி, ரதி, சிதம்பரநாதன், ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29.01.2020 காலை 10.00 மணி முதல் கல்கிசை மகிந்தமலர்ச்சாலையில் வைக்கப்பட்டு ஈமைக்கிரியைகள் 3.00 மணியளவில் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு தகனம் செய்யப்பட்டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: V. சாம்பவலிங்கம்
0760479587

(in 14378) (13.17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
0214931111

## மரண அறிவித்தல்

### திருமதி லீலாவதி இரகுநாதன்



பிறப்பு 25.07.1943 — இறப்பு 25.01.2020

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி இரகுநாதன் கடந்த (25.01.2020) சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சின்னம்மா தம்பதியின் அன்பு மகளும் லதா மங்கஸ்கோர் காலஞ்சென்ற இராசேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான இராசமணி, சோமசுந்தரம் சுந்தரலிங்கம் மற்றும் புஸ்பமணி, மகாலிங்கம், சிவலிங்கம், கனகேந்திரராணி, அன்னலிங்கம் மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜெயக்குமாரின் அன்பு மாமியும் யூலியான், மெலனி டயான், ஜெனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2020) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளங்கரை லேன், கோண்டாவில். — தகவல்: சகோதரர்கள்

## மரண அறிவித்தல்

### இராமசாமி நாகராசா

(ஓய்வுபெற்ற பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக்கூட்டுறவுச்சங்க முகாமையாளர்)

மாதகல் விபுலாநந்தர் வீதி மாதகலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி நாகராசா (ஓய்வுபெற்ற பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக்கூட்டுறவுச்சங்க முகாமையாளர்) நேற்று (28.01.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி பாக்கியம் தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அமிர்தரஞ்சினியின் ஆசை கணவரும் சரவணன் (கனடா), முகந்தன், கார்த்திகா (கனடா), ஐங்கரன் (கனடா), ஸ்ரீரங்கன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும் கலாதரன், சங்கீதா, சுஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரராஜா, காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா, பஞ்சாட்சரதேவி, ஆகியோரின் அன்புச்சகோதரனும் Dr. ஊர்திகா, வியஜமாலா, சின்னத்துரை, கந்தசாமி, துரைராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சிறீபதி மற்றும் பாலச்சந்திரன், சுகுமாரன், மனோகரன் ஆகியோரின் மைத்துனரும் Dr. காயத் திரி, தர்சிகா, கௌதமி, சங்கீர்தன், துளசி ஆகியோரின் பெரிய தந்தையும் கஸ்தூரி, கௌரிசங்கர், பவித்திரன், அபிராமி, பிரசன்னா, தனஞ்செயன், லதா, கலா, சுதா, கஜந்தினி, செந்தூரன், ஜனா, காயத்திரி, அம்பிகா, காலஞ் சென்ற சஞ்செய், மற்றும் நிசாந்தினி, பிரயாந்தினி, ரோகினி, நாகதீபன், Dr.ரஜீவ், Dr.ரகுராம் ஆகியோரின் மாமனாரும் ஆரணி, பவிசன், பிரஜீன், வாசுராம், வாசுகி, தேவ்ராஜ் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2020) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் ஆஸ்பத்திரிவீதி சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு விளாவெளி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி தயாபரன்

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி தயாபரன் நேற்று (28.01.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பறுவதம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் தயாபரனின் அன்பு மனைவியும் இராசேந்திரம், புஸ்பவதி (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான புஸ்பநாதன், பாலேந்திரன், ஆகியோரின் அன்புச்சகோதரியும் புஸ்பராணி, தயானந்தன் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரன் (பிரான்ஸ்), தயாகுணன், தயாளதேவன் (சுவிஸ்), உமாபாலன் (பிரான்ஸ்), இன்பவதி (கனடா), தயாநிதி (கனடா), உமானந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் அஜந்தன் (பிரான்ஸ்), அனுயன் (பிரான்ஸ்), அனித்தயன் (பிரான்ஸ்), அட்சரா (பிரான்ஸ்), அட்சயன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியம்மாவும் அருபி (ஸ்ரீஜெயவர்த்தன பல்கலைகழகம்), சஞ்சிகா (2ஆம் வருடம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி), கோகுல்ராஜ், பிரவீனா, பிரணவன், பிரகாசினி (கனடா), ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(29.01.2020)** புதன்கிழமை 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை கிழக்கு நொச்சிக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்

தகவல்: தி.தயாபரன்
(கணவன்)

# கொரோனா

# உலகை அச்சுறுத்தும் பேரரக்கன்!

தனு

உலக மக்களைப் பெரும் பீதிக்கு உள்ளாக்கியுள்ள 'கொரோனா வைரஸ்' தொற்றானது பாம்பின் மூலம் அல்லது ஒட்டகத்தின் மூலம் பரவி இருக்கலாம் என முரணான கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஆறு கோடி மக்கள் வாழும் சீனாவின் 'புஹான்' மாகாணத்திலேயே இந்த வைரஸ் தொற்றானது முதன் முதலில் அடையாளம் காணப்பட்டுள்ளது.


குறித்த வைரஸ் தொற்றானது மருத்துவ உலகுக்கே புதிதாக இருப்பதனால் இதுவரையில் இந்தத் தொற்றுக்கான மருந்து வகைகளோ தடுப்பூசிகளோ கண்டுபிடிக்கப்படவில்லை. அத்துடன் இது எங்கிருந்து, எதன் மூலம் பரவியதென உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் கண்டறியப்படாமை மருத்துவ உலகையே பெரும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

'கொரோனா வைரஸ்'க்கு' மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் உடனே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதெனவும், கிட்டத்தட்ட 65 மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழக்கும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எட்டு முதல் பதினெட்டு மாதங்கள் குறித்த வைரஸ் மூலம் ஏற்படும் தாக்கம் காணப்படும் என அமெரிக்காவின் 'ஜோன் ஹொப்கினிஷ்' வைத்திய பரிசோதனைப் பிரிவு தெரிவித்துள்ளதுடன், குறித்த பிரிவின் சிரேஷ்ட ஆய்வாளரான மருத்துவர் எரிக்டொனர்' இது தொடர்பில் குறிப்பிடுகையில் 'முன்னர் உலகை உலுக்கிய 'சார்ஸ் வைரஸ்' பரவிய வேகத்தை விட உலகம் முழுவதுமாக வெறும் ஆறு மாதங்களுக்குள்பரவும்சக்திவாய்ந்தவை எனத் தெரிவித்துள்ளார்.

**புதியது**

பரவலான தொகுப்பைச் சேர்ந்த 'வைரஸ் குடும்பத்தில்' இதுவரை வெறும் ஆறு வகையான வைரஸ் இனங்கள் மட்டுமே மக்களைப் பாதிக்கக்கூடியவை என அறியப்பட்டிருந்த போதிலும், தற்போது குறித்த வைரஸ் இனங்காணப்பட்டுள்ளமை மருத்துவ உலகை ஆட்டங்காண வைத்துள்ளது. சுவாசப் பிரச்சினை, காய்ச்சல், இருமல் போன்றனவே இதற்கான அறிகுறிகள் என மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ள நிலையில், குறித்த வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் 'உடல் உறுப்பு செயலிழப்பு மற்றும் நிமோனியா போன்ற காய்ச்சல் ஏற்பட்டு உயிரிழக்கலாம்' என கூறப்பட்டுள்ளதுடன், முதலில் இவை மனிதர்களின் நுரையீரலையே தாக்கும் எனவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்வேறுபட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், இதுவரையான மரபணு ஆராய்ச்சி முடிவுகளின்படி குறித்த வைரஸ் 'சார்ஸ் வைரஸ்' போன்று வௌவால் மூலம் பரவி இருக்கலாம் என ஆரம்பத்தில் சந்தேகம் வெளியிட்டாலும், பின்னர் இடம்பெற்ற தொடர் ஆராய்ச்சிகளின்



முடிவுகளின்படி இது 'பாம்பு' மூலம் பரவியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 'கொரோனா வைரஸ்' தொற்றுக்குள்ளான வௌவால்களை வேட்டையாடிய பாம்புகள் விற்பனைக்காகச் சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட போது, அவற்றின் மூலம் மக்களுக்குப் பரவியிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இஸ்ரேலிய உயிரியல் போர் நிபுணரான 'டேனி ஷோஹாம்' இந்த வைரஸ் ஆனது 'சீனாவின் இரகசியஉயிரியல்ஆயுதத்திட்டத்துடன்தொடர்புடைய 'வுஹான்' ஆய்வகத்தில் தோன்றியிருக்கலாம் எனவும், குறித்த ஆய்வகமானது சீனாவின் உள்ளூர் இராணுவ ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக நடத்தப்படும் இரகசிய ஆய்வகம் எனவும் தெரிவித்துள்ளார். குறித்த 'வைராலாஜி' தொடர்பான தகவலை 2015இல் 'வுஹான்' தொலைக்காட்சி வெளியிட்டிருந்த நிலையில் தற்போது 'ரேடியோ ப்ரீ இத்தகவலை மீள் ஒளிபரப்புச் செய்துள்ளதுடன், சீனாவின் மிக ஆபத்தான வைரஸ்களை ஆய்வு செய்யும் திறன் கொண்ட ஆபத்தான ஒரே ஆய்வுகூடம் இது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

எதன் மூலம் பரவியதென ஆதாரபூர்வமான தகவல்கள் இல்லாவிட்டாலும் இந்த வைரஸ் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகம் எனவும், இந்த வைரஸ் 'காற்றின் மூலம்' மிக வேகமாகப் பரவும் வாய்ப்புக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், நோய்த் தொற்று ஏற்பட்டுள்ள இடத்திற்குச் செல்வதை முற்றாகத் தவிர்ப்பதுடன் நோயால் பாதிக்கப்பட்டவரிடமிருந்து முழுமையாக விலகி இருக்கும்போது மட்டுமே இந்த வைரஸ் தொற்றிலிருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்க முடியும் என மருத்துவ நிபுணர்கள் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

**அன்று 'சார்ஸ்'**
**இன்று 'கொரோனா'**

2002ஆம் ஆண்டில் சீனாவில் பூனையில் இருந்து பரவிய இதே போன்ற 'சார்ஸ்' வைரஸ் மூலம் உலகம் முழுதும் 700 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ்தொற்றுமூலம்'2000க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் நோயால் பாதிக்கப்பட்ட நபரை முற்றாகத் தனிமைப்படுத்தி சிகிச்சையளிக்க வேண்டும் எனவும், இல்லையேல் நோய் பீடிக்கப்பட்ட ஒருவர் மூலம் அவரைச் சுற்றியுள்ள பதின்நான்கு பேருக்கு குறித்த வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாகவும்' சீன மருத்துவரான மருத்துவர் ஜின்ஹீய் தெரிவித்துள்ளார். இதுவரையில், சீன மருத்துவர் ஒருவர் உட்பட 56 பேர் குறித்த தொற்றினால் பலியாகி உள்ளனர் தொற்றுக்கு உள்ளாவர்களில் 300 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளானதாகவும் 'சீன தேசிய சுகாதார ஆணையம்' அறிக்கை வெளியிட்டுள்ளது.

சீனாவின் 'புஹான்' மாகாணத்தில் ஆரம்பித்து, உலகம் முழுவதும் பரவி வரும் 'கொரோனா வைரஸ்' தொற்றின் மூலம் குறித்த மாகாணத்தில் மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளமையுடன் போக்குவரத்து முடக்கம், பயணக் கட்டுப்பாடுகள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஐக்கிய நாடுகள் சபையால் அவசர கால நிலையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பல்கிப் பெருகுகிறது**

சீனாவைத் தொடர்ந்து ஆஸ்ரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், சிங்கப்பூர், ஹொங்கொங், தாய்லாந்து, சவூதி அரேபியா, வடகொரியா, தென்கொரியா, நேபாளம், தாய்வான், ஜப்பான் என உலகளாவிய ரீதியில் 'கொரோனா' பரவத் தொடங்கியுள்ளது.

இத் தொற்றிலிருந்து தம் நாட்டு மக்களைப் பாதுகாத்துக் கொள்ள களத்தில் இறங்கியுள்ள உலக நாடுகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையங்களில் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படுவதுடன் சீன மக்களின் உள்வருகைக்கு வடகொரியா, தென்கொரியா போன்ற நாடுகள் தடைவிதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கு இலங்கை மட்டும் விதிவிலக்கா என்ன.....? குறித்த வைரஸ் தொற்றினைத் தவிர்க்கும் முகமாக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிலையிலும் 'வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும்' என்ற சந்தேகத்தின் பேரில் சீனப் பிரஜைகள் சிலர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் பரிசோதனை முடிவில் 48 வயதான சீனப் பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சீனாவில் உள்ள இலங்கை மாணவர்களை உடனடியாக நாட்டிற்கு அழைத்து வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், பொது இடங்களில் நடமாடுவதை இயன்றளவு தவிர்த்து வீடுகளில் இருக்குமாறும், 'காய்ச்சல், இருமல், மூச்சுச் சிரமம், தடிமன், தலைவலி, தொண்டைவலி' போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் இலங்கை சுகாதார திணைக்களம் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

> பொது இடங்களில் நடமாடுவதை இயன்றளவு தவிர்த்து வீடுகளில் இருக்குமாறும், 'காய்ச்சல், இருமல், மூச்சுச் சிரமம், தடிமன், தலைவலி, தொண்டைவலி' போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் இலங்கை சுகாதார திணைக்களம் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

என்ன தான் உலகில் கண்டுபிடிப்புக்கள், மாற்றங்கள் நடைபெற்று வந்தாலும் நாளுக்கு நாள் புதிய புதிய சவால்களைச் சந்திக்க வேண்டியே உள்ளது. இதற்கு மருத்துவ உலகும் விதிவிலக்கல்ல. சூறாவளியாய் தோற்றம் பெற்றுள்ள 'கோரோனோ வைரஸ்' இன்னும் எத்தனை பாதிப்புக்களை, உயிர்ப்பலிகளை நிகழ்த்த காத்திருக்கிறதோ தெரியவில்லை. ஆனால், அதிசயங்களும் சாதனைகளும் நிகழ்ந்து வரும் இந்நூற்றாண்டில் குறித்த வைரஸ் தொற்றுக்கு 'முற்றுப்புள்ளி' வைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளதுடன் மருத்துவ விஞ்ஞான உலகிற்கு மிகப்பெரும் சவாலாகவே அமைந்துள்ளது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தனிவலியல்ல, கூட்டுவலி!

பெப்ரவரி 4 இல் கொண்டாடப்படவுள்ள இலங்கையின் சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு காணாமற்போன உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களது கோரிக்கையில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமிருக்கமுடியாது.

இலங்கை சுதந்திரம் பெற்றுவிட்டதாக குதூகலிக்கும் அந்த நாளில் குறித்த உறவுகள் கண்ணீருக்குள் மூழ்கியபடி தங்களுடைய பிள்ளைகளையோ கணவனையோ நினைந்து கதறுவதுதான் கடந்த ஒரு தசாப்தமாக நடந்து வருகிறது. அவர்கள் மட்டுமல்ல இன்னமும் அரசியல் கைதிகள் என்ற போர்வையில் எந்தவித விசாரணைகளும் இன்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களும், அவர்களின் உறவுகளும் இதே சுதந்திரதினத்தில் தமக்கு எப்போது விடிவு கிடைக்கும் என ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சில நாள்களுக்கு முன்னர் "காணாமல் ஆக்கப்பட்டோர் எவரும் இப்போது இல்லை" என்று இரக்கமற்ற வார்த்தைகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ உதிர்த்திருந்தார். இறுதிப்போரின் போது போருக்குப் பொறுப்பாக தானே இருந்ததாக மார்தட்டிக்கொள்ளும் கோத்தாபய காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் மட்டும் தனக்குப் பொறுப்பில்லை என்ற ரீதியாக நடந்து கொள்கிறார். இப்போது ஒரு படி மேலே போய் காணால் ஆக்கப்பட்டோர் அனைவரையும் உயிரிழந்த பட்டியலில் சேர்த்தும் விட்டார். அவ்வாறு அவர்கள் உயிரிழந்து விட்டார்கள் எனில், யாரால் கொல்லப்பட்டார்கள் என்ற உண்மையையும் ஜனாதிபதி சொல்லியிருக்க வேண்டும். எல்லாம் வல்ல சர்வநாயகராக அந்தக் காலத்தில் இருந்த கோத்தாபய கொல்லப்பட்டவர்களைப் பற்றி அறிந்திருப்பாராயின் கொலை செய்தவர்கள் பற்றியும் தெரிந்தேயிருப்பார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் இல்லை என்று கைவிரிக்கும் ஜனாதிபதிக்கு அவர்களை அவ்வாறு இல்லாமல் ஆக்கியோரை உலகின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பும் உண்டு. ஆனால் அவர் அப்படிச் செய்யப்போவதில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் இல்லை என்ற ஒற்றை அறிவிப்போடு இந்த விவகாரத்தை கோத்தாபய ராஜபக் ஷ கடந்து விடுவார். எனினும் எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் தங்கள் உறவுகள் உயிரோடு மீண்டு வருவார்கள் என்ற கனவோடு காத்திருப்பவர்களுக்குத் தான் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு பெரும் இடியை இறக்கியிருந்தது.

இந்த நிலையில்தான் அவர்கள் சுதந்திரதினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வலி என்பது தனியே ஒரு குறிப்பிட்ட தொகையினருக்குரியதன்று. ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினதும் கூட்டுவலி. ஒவ்வொரு தமிழர்களும் இந்த வலிக்குச் சொந்தக்காரர்கள். எனவே தனியே காணாமல் ஆக்கப்பட்டோர் மட்டும் இந்தச் சிலுவையைச் சுமக்கவேண்டும் என்று நினைக்காமல் எல்லோரும் பெப்ரவரி 4 ஐ கறுப்பு நாளாக மனதில் இருத்துவோம். இதன்மூலம் அரசாங்கம் எந்தவிதத்திலும் தன் நிலையை விட்டு அசையாவிட்டாலும்கூட நாங்கள் எதிர்த்தோம் என்ற வரலாற்றையாவது பதிவு செய்வோம்.

## தமிழ் இளைஞர்கள் கடத்தல்

# கடற்படைத் தளபதிகள் மீதான விசாரணையை நிறுத்த பரிந்துரை

## ஜனாதிபதி ஆணைக்குழு விடுத்தது

**கொழும்பு, ஜன. 29**

**11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட மற்றும் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க ஆகியோருக்கு எதிரான விசாரணையை இடைநிறுத்துமாறு சட்ட மா அதிபருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை வழங்கியுள்ளது.**

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக பதவி துறந்த அல்லது நடவடிக்கைகளுக்கு உள்பட்ட அரச ஊழியர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் துணை அரச நிறுவனங்களின் பணியாளர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவே இந்தப் பரிந்துரையை சட்ட மா அதிபருக்கு வழங்கியுள்ளது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஜகத் பாலபெட்டபந்தி தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இதன் செயலராக சட்டத்தரணி சுமுது கே.விக்கிரமராச்சி உள்ளார்.

2008ஆம் ஆண்டு மற்றும் 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் 11 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமல் போகச்செய்யப்பட்ட சம்பவத்துக்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட மற்றும் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் கடற்படை அதிகாரிகள், சிப்பாய்கள் உள்பட 14 பேர் எதிரிகளாக உள்ள்னர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



# "என்ன சொன்னாலும் கொட்டுவோம் குப்பை!'

## விஷமிகள் அடாவடி

யாழ்ப்பாணம்.ஜன.29

குப்பைகள் கொட்ட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்ட பதாகை பொருத்தப்பட்டுள்ள போதும், அங்கு விஷமிகளால் குப்பைகள் அடாவடியாக அதிகளவில் கொட்டப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச செயலகம் அமைந்துள்ள இடத்துக்கு சுமார் 50 மீற்றர் தூரத்தில் இவ்வாறு குப்பைகள் கொட்டப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் பிரதேச செயலகத்துக்குத் திரும்பும் வீதியின் முகப்பில் குப்பைகள் கொட்டப்பட்டுள்ளன.

அதேவேளை குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் "முன்புறத்தில் இரகசிய கமரா பொருத்தப்பட்டுள்ளது. இவ்விடத்தில் குப்பைகளைப் போட வேண்டாம்.

அடையாளம் காணுமிடத்து , தகுந்த தண்டனையை அனுபவிக்க நேரிடும். " என்று அறிவுறுத்தல் எழுதப்பட்ட பதாகையும் பொருத்தப்பட்டுள்ளது. அதன் கீழேயே குப்பைகள் கொட்டப்பட்டுள்ளன. (க-37)

# படைகளின் ஆளுகையிலுள்ள வீதியை விடுவிக்கக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 29

வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கட்டுவன் சந்தியிலிருந்து மயிலிட்டி வரையிலான வீதியில், 375 மீற்றர் இராணுவத்தினதும் 25 மீற்றர் விமானப்படையினதும் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்த வீதியை பொதுமக்கள் பாவிக்கக்கூடியதாக விடுவிக்கப்பட வேண்டும் என்று வலி.வடக்கு பிரதேச சபை தலைவர் சோ.சுகிர்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து மேற்படி 400 மீற்றர் நீளமான வீதியை பொதுமக்கள் பாவனைக்கு விடுவிக்க உரிய அமைச்சுக்கு கடிதம் ஒன்றை எழுதுமாறு யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலரிடம் (காணி) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கோரியுள்ளார். (து-50)



# சுதந்திர தினத்தில் மதுவுக்குத் தடை!

கொழும்பு, ஜன. 29

சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடுமுழுவதும் உள்ள அனைத்து மதுபான கடைகளும் பெப்ரவரி 4ஆம் திகதி மூடப்படும் என மதுவரித்திணைக்களம் அறிவித்துள்ளது. (ம)



# பாடசாலையை வழிமறித்து பெற்றோர் போராட்டம்



மன்னார், ஜன. 29

மன்னார் அச்சங்குளம் அ.த.க.பாடசாலை அதிபர், வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நடத்துவதற்கு மறுத்ததால், கோபமடைந்த பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமலும், ஆசிரியர்களைப் பாடசாலைக்குள் போக விடாமலும் பாடசாலை வாயிலைப் பூட்டி தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றது. இந்தப் பிரச்சினை தொடர்பாக மன்னார் வலயக் கல்வி பணிப்பாளர் ஜே.பிரட்லிக்குத் தெரியப்படுத்தப்பட்டது. உடனடியாக அலுவலர்களை அவ்விடத்துக்கு அனுப்பி பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக அவர் கூறினார்.

இதனை அடுத்து பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

அச்சங்குளம் ஆரம்ப பாடசாலை அதிபரிடம் இதுகுறித்துக் கேட்டபோது, "தற்போது வேறு ஒரு நிகழ்வில் கலந்து கொண்டிருப்பதால் இது தொடர்பாக விளக்கம் அளிப்பதற்கு நேரம் இல்லை." -என்றார். (து-213)

## இன்று முதல் நெல் கொள்வனவு

யாழ்ப்பாணம்,ஜன. 29

முல்லைத்தீவு , மன்னார் மாவட்டங்களில் இன்று முதல் நெற் சந்தைப்படுத்தல் சபையால் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யப்படும். ஈரப்பதம் குறைந்த நெல் கிலோ 50 ரூபாவுக்கும், ஈரப்பதம் அதிகமான நெல் 44 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும்.

அதற்கமைவாக ஓர் ஏக்கர் முதல் 3 ஏக்கர் விதைப்பை மேற்கொண்டவர்களிடம் 3 ஆயிரம் கிலோவும், 4 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரையில் விதைப்பு மேற்கொண்டவர்களிடம் 5 ஆயிரம் கிலோ நெல்லும் கொள்வனவு செய்யப்படும் என்றுமாவட்டச்செயலகத்தினர்தெரிவித்துள்ளனர். (க-105)

## கலைப் போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜன. 29

இசையிலும், நடனத்திலும் அதிக ஆர்வம் கொண்டவர்களுக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்க, யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் நெறிப்படுத்தலின் கீழ் பாடல் மற்றும் நடனப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை இணுவில் மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையின் கலை கலாசார மண்டபத்தில் முதற்சுற்று நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களைத் தத்தமது பிரதேச செயலகங்களிலோ, கிராம அலுவலர் அலுவலகங்களிலோ, அருகிலுள்ள இராணுவ முகாம்களிலோ அல்லது போட்டியின் முதற்சுற்றானது இடம்பெறும் மண்டபத்திலோ பெற்றுக்கொள்ள முடியும்.

போட்டியாளர்கள் 18 தொடக்கம் 32 வயதுக்குட்பட்டவர்களாக இருத்த்ல் வேண்டும், நடனமானது தமிழ் கலாசாரத்தை பின்பற்றியதாகவோ அல்லது பரத நாட்டியமாகவோ மாத்திரம் இருத்தல் வேண்டும், நடனத்தில் பங்குபற்றுபவர்கள் தமது நடனத்தை வழங்கும் போது அவற்றுக்கான பின்னணி இசையானது இறுவட்டுக்களின் மூலமோ ஒலிநாடாக்களின் மூலமோ இசைக்க அனுமதிக்கப்பட மாட்டாது, யாழ். மாவட்டம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதே சங்களில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

## மாணவர்கள் கௌரவிப்பு

கோண்டாவில்,ஜன. 29

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்களது பிள்ளைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு புலைமை பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும், 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதார்ண தரப் பரீட்சையில் 5 ஏ க்கு மேல் திறமைசித்தி பெற்றவர்களும் மற்றும் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ.த. உயர்தரத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். இவற்றுக்கு தகுதியுடையோர் ஆவணங்களை அதிபர் அல்லது கிராம அலுவலகர் உறுதிப்படுத்தலுடன் பலாலி வீதி கோண்டாவில் சந்தியில் அமைந்து உள்ள விநாயகர் வாணிபத்தில் அல்லது தபேசன் விவசாய மாளிகையில் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

****

சாவகச்சேரி ஜன. 29

தென்மராட்சிக் கல்வி வலயத்தால் விளையாட்டுத் துறையில் மாகாண மற்றும் தேசிய நிலைகளில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை வலயக் கல்வி பணியகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

விளையாட்டுத்தறையில் சாதனைகளைப் பதிவு செய்யும் மாணவர்களை ஊக்குவிக்கவும், ஏனைய மாணவர்களை வலுவூட்டவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மதிப்பளிப்பு நிகழ்வு சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-222, 9)

## கொண்டலடி விநாயகருக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,ஜன. 29

யாழ்ப்பாணம் வண்வடகிழக்கு கொண்டலடி விநாயகர் (இறைமூத்த நைனார்) ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பரத்திருவிழாவும்,7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த திருவிழாவும் நடைபெற்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## பொதுக்கூட்டம்

சுழிபுரம்,ஜன. 29

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் விக்ரோறியாக் கல்லூரியின் சிவபாதசுந்தரனார் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

கழக அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்தில் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## ஆள் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.29

பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் பயிலுநர் பதவிகளுக்கான ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்ப படிவங்கள் அந்தந்த கிராம அலுவலர் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதனைப் பூர்த்தி செய்து அவர்களிடமே ஒப்படைக்குமாறு வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (க)

## தொழில் திணைக்களத்துக்கு பணிப்பாளர் நியமனம்



யாழ்ப்பாணம், ஜன.29

வடக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளராக திருமதி வனஜா செல்வரட்ணம் நியமி க்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமைகளை நேற்று முன்தினம் தொழில்துறைத் திணைக்களத்தில் பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளராக இது வரை பணியாற்றிய ஸ்ரீமோகன் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலராக நியமனம் பெற்றுச் சென்றதையடுத்து அந்த வெற்றிடத்துக்கே இவர் நிய்மிக்கப்பட்டார்.

திருமதி வனஜா செல்வரட்ணம் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார். வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை இவர் பதில் பணிப்பாளராக தொடர்ந்தும் அங்கு கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

# கட்சிபேதமின்றி செயற்பட்டால்தான் நாங்களும் அதற்கேற்ப உதவலாம்

## வடக்கு பிரதம செயலர் கூறுகின்றார்



தலைமன்னார், ஜன. 29

பல கட்சிகளால் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கு வந்திருக்கும் நீங்கள் மக்களுக்குச் சேவையாற்ற வந்தவர்கள். எனவே நீங்கள் (உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள்) கட்சி பேதமின்றி ஒன்றுபட்டு மக்களுக்குச் சேவையாற்றும்போதுதான் நாங்களும் உங்களுடன் இணைந்து சேவைசெய்ய முடியும் என்று வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு மாகாண குறித்தொகுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 12 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மன்னார் நானாட்டான் பிரதேச சபையின் முருங்கன் உப அலுவலகம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் பிரதம செயலர் மேலும் தெரிவித்ததாவது:

நானாட்டான் பிரதேச சபை வங்காலை, நானாட்டான், முருங்கன் என மூன்று பிரதேச சபை உப அலுவலகங்களைக் கொண்டது. இங்குள்ள மக்களுக்கு இந்தப் பிரதேச சபை சிறந்த சேவையாற்ற வேண்டுமானால் சிறந்த கட்டடம் தேவை என்பதை உணர்ந்துதான் இன்று இந்தக் கட்டடம் நிமிர்ந்து நிற்கின்றது.

ஓர் உள்ளூராட்சி மன்றம் சிறப்பாக இயங்குவதற்கு கட்டடம் மற்றும் பௌதிக வசதிகள் மட்டுமன்றி, உள்ளூராட்சி மன்ற நோக்கம், அதன் பொறுப்புக்கள் என்னவென்று உணர்ந்து செயல்படுகின்றபோதுதான் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்காக சேவையாற்ற முடியும்.

எனவே உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுகள் பொறுப்புக்கள் என்னவென்று இங்கு சொல்ல வேண்டியதில்லை.

காரணம் உள்ளூராட்சி உறுப்பினர்களாக நீங்கள் புதிதாக பொறுப்பேற்கும்போது தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் உள்ளூராட்சி ஆணையாளர் பல தடவைகள் பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளார்.

எனவே இந்த வாய்ப்புக்களைக் கொண்டு எல்லோரும் ஒரே மனதாக செயற்படுகின்றபோதுதான் இங்கே நானாட்டான் மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடைபெற்றபொழுது ஒவ்வொருவரும் ஒவ்வோர் அரசியல் கட்சிகளுக்கூடாக போட்டியிட்டிருந்தீர்கள்.

ஆனால் அபிவிருத்தி என்று வரும்பொழுது நாங்கள் கட்சிகளுக்கப்பால் நின்று எங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் உள்ளூராட்சி மன்றங்களின் நோக்கத்துடன் செயற்படுகின்றபோதுதான் இந்த மக்களுக்கான சேவையை நாம் வழங்க முடியும்.

நாங்கள் ஒவ்வொரு வருடமும் வடக்கு மாகாணத்துக்குப் பத்தாயிரம் பதினொராயிரம் மில்லியன் ரூபா கேட்கின்றோம். ஆனால் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி மூவாயிரம் மூவாயிரத்து ஐந்நூறு மில்லியன் ரூபாவே.


இவற்றை வைத்துக் கொண்டு ஐந்து மாவட்டங்களுக்கு 34 உள்ளூராட்சி மன்றங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வது கடினமான காரியம்தான்.

இந்த ஆண்டும் நாங்கள் பதினொராயிரம் மில்லியன் ரூபாவைவிட மத்தியில் ஒதுக்கப்படுவதில் கூடுதலான நிதி மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று முன்னைய ஆளுநர், செயலாளர்கள் முன்னைய ஜனாதிபதியுடன் கதைத்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து அது பற்றிய விவரம் திறை சேரிக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால் அரசு மாறியுள்ளதால் என்னநிலை என்று தெரியவில்லை.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. தேர்தலுக்குப் பின்புதான் வரும் என்கின்றார்கள். நாடாளுமன்றில் வரவு செலவு திட்டம் கொண்டு வருகின்றபொழுது எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதை எடுத்துக்கூறி நிதியை அதிகரிக்கின்றபொழுது நாங்கள் இன்னும் கூடுதலான சேவைகளைச் செய்யக்கூடியதாக இருக்கும். - என்றார்.

(த-60)



## நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஜன. 29

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை வியாழக்கிழமை காலை 8 மணிதொடக்கம் மாலை 5 மணி வரை - **யாழ்ப்பாண மாவட்டத்தில்** கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம் ஒரு பகுதி, உதயபுரம், மணியம்தோட்டம், மணியம் தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் - **வவுனியா மாவட்டத்தில்** - மதவுவைத்தகுளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம், பம்பைமடுக் கிராமம் ஆகிய இடங்களிலும் - **மன்னார் - மாவட்டத்தில்** - சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, தோட்ட வெளி, மன்னார் மருத்துவமனை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கைத் தொலைத் தொடர்பு நிலையம், மாவட்டச் செயலர் அலுவலகம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## தோட்டத் தொழிலாளர்கள் தொடர் வேலைநிறுத்தம்

எல்ல பிரதேச செயலகத்துக்குட்பட்ட உட்பட்ட நாவில தோட்டம், தெமோதர தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக கடந்த 9 நாள்களாக தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தோட்ட மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் அரை நாள் சம்பளம் வழங்கப்படுவதைக் கண்டித்து நாவில சந்தியில் சுமார் 500 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்று இரண்டு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு ஆதரவாக எல்ல பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (க)



## தேனீ வளர்ப்பு பயிற்சிக் கருத்தரங்கு

முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பகுதிகளைச் .சேர்ந்த விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன், தேனீ வளர்ப்பு தொடர்பான பயிற்சிக் கருத்தரங்குகள் கடந்த 3 நாள்களாகத் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நடத்தப்பட்டன.

59 ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் 35 பேருக்கான பயிற்சிக் கருத்தரங்கு முள்ளியவளை ஊற்றங்கரை ஐங்கரன் மண்டபத்திலும், 64 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த 152 விவசாயிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒட்டுசுட்டானிலும், 68 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த 100 விவசாயிகளுக்கான தேனீ வளர்ப்பு பயிற்சி கருத்தரங்கு புதுக்குடியிருப்பிலும் நடத்தப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெயந்த செனவிரத்னவின் வழிகாட்டலில்,



பிரிகேடியர் பிரியந்த பெரேரா தலைமையில் நடைபெற்ற பயிற்சிக் கருத்தரங்குகளில், தேனீ உலக மாதாந்த சஞ்சிகையின் விரிவுரையாளர் சந்திரக தம்மி ஆராச்சி கலந்து கொண்டு தேனீ பராமரிப்பு மற்றும் தேனீ வளர்ப்பு தொடர்பான விரிவுரையை வழங்கினார்.

கருத்தரங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் தேனீ வளர்ப்புக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க-19)

# பண்பாட்டை அழியவிடாதீர்!

## உடற்கல்வி 'டிப்ளோமா' சங்க தலைவர் வலியுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 29

எமது மூதாதையர்கள் பாதுகாத்து வந்த பண்பாட்டை அழியவிடக்கூடாது என்று உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தா்மகுமாரன் தெரிவித்தார்.

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் 2020ஆம் ஆண்டுக்கான தைப்பொங்கல் விழா மருதனார்மடத்திலுள்ள முதியோர் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் சிறப்புரையாற்றிய சங்கத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் விஷேடமான பண்பாடே தமிழர்களை இன்றும் வாழவைத்துக்கொண்டிருக்கிறது. அதாவது சிறந்த உணவுப் பழக்கம் சுகாதாரம், ஒழுக்கம் நன்றி மறவாமை, அன்பு செலுத்துல், கலைகள், ஆன்மிகம் என்பன வாழ்வியலை வலுவாக்கி வரலாற்றுடன் இணைந்து பயணிக்க வைக்கின்றன.

ஆனால் நாம் பண்பாட்டிலிருந்து விலகும்போது தொற்றுநோய்கள் தொற்றா நோய்கள், வன்முறைகள் என்பன தோன்றுவதற்கு வழி அமைத்துக்கொடுப்பதுடன் தமிழினத்தின் அடையாளத்தில் களங்கம் ஏற்பட்டு பண்பாட்டைத் தொலைத்து விட வேண்டிய சூழல் ஏற்படும்.

எனவே மூதாதையர்கள் உருவாக்கிய தனித்துவ பண்பாட்டை எந்தவித நாகரிக கலப்பும் அற்ற முறையில் எமது இளைய தலைமுறையினர் அடுத்த சந்ததிக்கும் கொண்டு செல்லவேண்டும். இதுவே தமிழினத்தை வாழவைக்கும் - என்றார்.

அதுமட்டுமன்றி, பண்பாடே இனத்தின் அடையாளம். முதியவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. அவர்களிடமிருந்து எமக்குத் தேவையான நல்ல விடயங்களைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தவேண்டும்.

அவர்களின் கருத்துக்களைச் செவிமடுக்காது விடுவது நல்லதல்ல. மூத்தோர்களின் ஆசீர்வாதம் கட்டாயமானது. இதனை உணர்ந்து இளையோர் செயலாற்ற முன்வரவேண்டும் என்று மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் முதியோர் உடற்கல்வி ஆசிரியர்கள், சிறுவர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (த-50)

# வடக்கு -கிழக்கு இணைந்தால் மட்டுமே அதிகாரம் தேவை

## கிழக்கில் தோன்றிய புதிய கட்சிக் கருத்து

மட்டக்களப்பு, ஜன. 29

வடக்கு - கிழக்கு இணைந்த பின்னர் காணி பொலிஸ் அதிகாரங்கள் கிடைக்கப்பெற வேண்டும். அவ்வாறு இணையாதவிடத்து அந்த அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்கினால் அது கிழக்கிலுள்ள தமிழர்களுக்கு பேராபத்தாக அமைந்துவிடும்.



இவ்வாறு, கிழக்கு மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மக்கள் முன்னேற்றக் கட்சி தெரிவித்துள்ளது.

இது பற்றி கட்சியின் செயலாளர் நாயகம் அருண் தம்பிமுத்து செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:

"கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழர்களின் குடிப் பரம்பலும், பொருளாதாரமும், இளைஞர் யுவதிகளின் எதிர்காலமும், சின்னாபின்னமாகி கேள்விக்குள்ளாகியிருக்கின்றன.

எனவே கிழக்கு மக்களின் முன்னேற்றத்துக்கு எமது கட்சி எதிர்காலத்தில் சிறந்ததொரு வழியை வகுத்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கையுடன் அரசியலுக்குள் பிரவேசிக்கின் றோம்.

அரசியல் பொருளாதார, சுய நிர்ணய உரிமைகள் அனைத்தையும் புதிய வழிப்பாதையில் நாங்கள் நிவர்த்தி செய்வோம் என்ற நம்பிக்கையில் நாங்கள் ஒரு புதிய பரிமாணத்தை ஆரம்பிக்கின்றோம்.

புதிய அரசியல் கட்சிகளின் தேவை ஏற்படாவிடின் புதிய அரசியல் கட்சிகள் உருவாக முடியாது. தற்போது கிழக்கு மண்ணில் பல தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய அரசியல் கட்சிகள் இல்லாத நிலையில், மக்கள் முன்னேற்றக் கட்சிகள் போன்ற கட்சிகள் உருவாகின்றன. புதிய அரசியல் கட்சிகள் உருவாவதால் வாக்குகள் சிதைவடையும் என்ற கருத்துக்களுக்கு அப்பால், எமது அரசியல் நகர்வு தெளிவாக இருந்தால் வாக்குகள் ஒருபோதும் சிதைவடைய மாட்டா.

வடக்கு கிழக்கு இணைந்த பின்னர் தான் காணி பொலிஸ் அதிகாரங்கள் தமிழர்களுக்குச் சாதகமான விடயங்களாக இருக்கும்" - என்றார். (த-46)

# வாடி வீடு தீக்கிரை

ஹற்றன்.ஜன.29

ஹற்றன் மல்லியப்பு பகுதியில் அமைந்துள்ள பல வருடம் பழமை வாய்ந்த வாடி வீடு, திடீரென நேற்று அதிகாலை 4.15 மணியளவில் தீப்பற்றி எரிந்துள்ளது.

டிக்கோயா நகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 2 மணித்தியாலயங்களுக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும் பொருள்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன. தீயால் ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரை கணிக்கப்படவில்லை. தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

# வவுனியா அலுவலகத்தில் தகவல் அதிகாரி இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 29

வவுனியா மாவட்ட தொல்லியல் திணைக்களத்தின் அலுவலகத்தில் தகவல் அதிகாரி நியமிக்கப்படவில்லை என்று மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் குறித்த திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்ட மாவட்டங்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டன.

இதற்குப் பதிலளித்த அதிகாரிகள்:

இந்தத் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தகவல் அதிகாரி தொல்லியல் பணிப்பாளர் நாயகத்தால் தொல்லியல் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே தாங்கள் கோரும் தகவல்களைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை தொல்லியல் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்துக்குச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு கூறியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அலுவலகத்துக்குச் சென்றபோது, யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்துக்கு உட்பட்ட தகவல்களை மட்டும் வழங்கினர்.

எனினும், 2016ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவல் அறியும் சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் குறித்த தகவலை பிற அலுவலகத்தில் இருந்தே பெறவேண்டுமானாலும் அவர்களே அதனைப் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-105)



# 70 கிலோ வல்லப்பட்டை மீட்பு

மன்னார்.ஜன.29

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார் பகுதியில் பல இலட்சம் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகளுடன், இருவர் கைது செய்யப்பட்டனர். மன்னார் மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் இருவரையும் நேற்று முன்தினம் மாலை கைது செய்தனர்.

கடற்படையினர் வழங்கிய தகவலுக்கு அமைவாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக, மன்னார் மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி பொலிஸ் பரிசோதகர் கங்காபதி ஆர்த்தனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் தேடுதலில் ஈடுபட்டனர். சன்னாரில் வைத்து இருவரைக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான 70 கிலோ வல்லப்பட்டைகள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட 21 மற்றும் 60 வயதுடைய இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட வல்லப்பட்டைப் பொதிகள் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை மன்னார் மாவட்டப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-56)

# ரெலோவின் உடைவு பாதிப்பில்லை

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, ஜன.29

ரெலோவுக்கு வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலுமே செல்வாக்கு உள்ளது. யாழ்ப்பாணத்தில் ரெலோ கட்சியில் ஏற்பட்ட உடைவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கவில்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

புளொட் அமைப்பின் தலைமை அலுவலகம் நேற்று வவுனியா, கோயில்குளத்தில் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நடக்கவுள்ள பொதுத் தேர்தல் முக்கியத்துவம் மிக்கது. தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களித்து அவர்களின் பலத்தை நிரூபிக்க வேண்டிய தேவை உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள தேசியவாதம் பேசப்பட்டு, தமிழ் மக்களின் அபிலாசைகள் புறக்க ணிக்கப்பட்டதை நாம் பார்த்தோம். நாம் பிரிந்து நிற்பது தமிழ் மக்களின் பலத்தைப் பாதிக்கும்.

வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவிலும், வவுனியாவிலும் எமது கட்சி சார்பாக இரு வேட்பாளர்களைக் களமிறக்குவோம். ஓரிரு வாரங்களில் வேட்பாளர்களை மாவட்டக் குழு தீர்மானித்து இறுதி செய்யும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுப் பலர் வெளியேறியுள்ளனர். சில கட்சிகளும் வெளியேறியுள்ளன. யாழ்ப்பாணத்தில் ரெலோவில் இருந்தும் சிலர் வெளியேறியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இந்த உடைவு தாக்கம் செலுத்தும் என்று நினைக்கவில்லை.

தற்போது குற்றச் செயல்கள் அதிகரித்துள்ள நிலையில் இராணுவச் சோதனைச் சாவடிகள் மற்றும் நடவடிக்கைகள் தேவை என்ற அபிப்பிராயம் மக்கள் சிலரிடம் உள்ளது. ஆனால் இராணுவ மயமாக்கலின் ஆரம்பமாக இது உள்ளதால் பாதகமான முடிவுகளை தரும். பாதுகாப்பு முக்கிய விடயம் எனினும், அது பொலிஸ் துறையின் கண்காணிப்பாக இருப்பதே சிறப்பானது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் என்னை விட ஜனாதிபதிக்கு அதிகம் தெரியும். காணால் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இல்லை என்ற கூற்றை நம்பி நாம் பேசாது இருந்து விட முடியாது. அவர்கள் இறந்திருந்தால் அது எப்படி? எங்கு? நடந்தது என்பதைக் கூறுவது அவர்களது கடமை. என்றார்.

அலுவலகத் திறப்பு நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், கட்சியின் முக்கிய உறுப்பினர்களான க. சந்திரலிங்கம், சு. ஜயதீஸ்வரன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-110)

# தலைமையகம் புதிய கட்டடத்தில்

முல்லைத்தீவு,ஜன.29

புதுக்குடியிருப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகம் புதிய கட்டடத்தில் செயற்படவுள்ளது.

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகம் பழைய கட்டடத்திலேயே இது வரை செயற்பட்டு வந்தது.

தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட் டுள்ள சங்கத்தின் கிராமிய வங்கியும், மேல்மாடியில் அமைந்துள்ள சங்கத் தலைமையகத்தினதும் செயற்பாடுகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று புதுக்குடியிருப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் வடக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.சிங்கநாதன், ஓய்வுநிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ.சுபசிங்க, புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் செ.பிரேமகாந் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்வர். (க-19)




யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குருநகர் மேற்கு ஜே.68 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ஐஸ் பிலான்ட் வீதிப் பகுதியில் பொது வெளியில் குப்பைகள் கொட்டப்படுகின்றமையால், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அந்தப் பகுதியில் நீண்ட காலமாகக் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் மாநகர சபையினர் மற்றும் கிராம சேவையாளரிடமும் முறையிடப்பட்டது. எனினும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதனால் கிராமத்தில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. பல்வேறு தொற்று நோய்களும் பரவி வருகின்றன என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

எனவே அந்தக் குப்பைகளை அகற்றி கிராமத்தின் சுகாதாரத்தை உறுதிப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-111)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.29

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.எஸ்.பி.நாகரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-105)

\+ + +

தென்மராட்சி,ஜன.29

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி க.க.ஈஸ்வரன், சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரன், மதிப்புறு விருந்தினராக ஜ.ஓ.எம். நிறுவன மாவட்டத் திட்ட இணைப்பாளர் ச.சுசீகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

\+ + +

நீர்வேலி,ஜன.29

யாழ்ப்பாணம் நீர்வேலி றோ. க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி. தர்மரத்தினம் தலை மையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உப அதிபர் த.கோபாலகிருஷ்ணன் மற்றும் கிருபா லேணர்ஸ் உரிமையாளர் லயன் அ.கிருபாகரன் கௌரவ விருந்தினராக பழைய மாணவர் வி. சஞ்சீவன் (கனடா) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ)

\+ + +

கரந்தன்,ஜன.29

யாழ்ப்பாணம் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன். சிறப்பு விருந்தினராக வித்தியாலய பழைய மாணவனும் பொறியியலாளருமான வி. பரபரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ)

\+ + +

கொடிகாமம்,ஜன.29

கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதா லிங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ச.யுனிற்றன், தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மேம்பாட்டு திட்ட இணைப்பாளரும் ஆசிரிய ஆலோசகருமான க.ஸ்ரீகணேசன், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி மல்லிகா பாலசச்சந்திரன், ஓய்வு பெற்ற கணித ஆசிரியர் தி.சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

\+ + +

சாவகச்சேரி,ஜன. 29

மந்துவில் றோயன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியும், செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நிருபராணி அமிர்தலிங்கம், சிறப்பு. விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர்களான க.இராசேந்திரா மற்றும் சி.பவளேந்திரன். மதிப்புறு விருந்தினராக வே.சிவநிதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-9)

\+ + +

யாழ்ப்பாணம், ஜன.29

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவி திருமதி தனுசா வசீகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

\+ + +

நீர்வேலி,ஜன.29

நீர்வேலி, அத்தியார் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள உடற்கல்வி மற்றும் விளையாட்டு உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ)

# 30/1 தீர்மானத்துக்கு ஒருபோதும் இணங்கோம்



கொழும்பு, ஜன. 29

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் 2015ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 30/1 தீர்மானத்திற்கு ஒருபோதும் இணக்கம் தெரிவிக்கமாட்டோம். இந்தத் தீர்மானத்தை திருத்தியமைக்க அரசாங்கம் வாய்ப்பு கோருவதாக குறிப்பிடும் செய்திகள் முற்றிலும் பொய்யானவை என சர்வதேச உறவுகள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பிரதமர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 43ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 20ஆம்திகதிவரை இடம்பெறவுள்ளது. இலங்கை தொடர்பான விவாதம் மார்ச் மாதம் இடம்பெறும். இந்தக் கூட்டத்தொடரை இம்முறை அரசாங்கம் மாறுபட்ட விதத்திலே அணுகும். 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் 30/1 தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு அப்போதைய வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த மங்கள சமரவீர, நாடாளுமன்றத்துக்கும், முன்னாள் ஜனாதிபதிக்கும் பிரேரணை தொடர்பில் முன்னறிவிக்காது, இணை அனுசரணை வழங்க இணக்கம் தெரிவித்தார். இது அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல. அவரது தனிப்பட்ட தீர்மானம். 30/1 தீர்மானத்தில் குறிப்பிட்ட விடயங்கள் முற்றிலும் இலங்கை. அரசமைப்புக்கு முரணானவை என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கடந்த வருடம் இடம்பெற்ற 40ஆவது கூட்டத்தொடரின் போது எடுத்துரைத்தார். கடந்த அரசாங்கம் மேற்குலக நாடுகளினதும் தொண்டு அமைப்புக்களினதும் விருப்பத்திற்கு இணங்கவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் செயற்பட்டது. அவர்களைப்போல் செயற்படுவதற்கு எமக்கு அவசியம் கிடையாது - என்றார். (ம)





## மாணவிக்கு கௌரவிப்பும் கோவிலுக்கு நிதி வழங்கலும்

வவுனியா, ஜன.29

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவிக்கு மதிப்பளிப்பும், மன்னார் தண்டுவான் ஆலயத்துக்கு நிதி வழங்கும் நிகழ்வும் நேற்று மன்னாரில் நடைபெற்றன. வன்னி மக்கள் காப்பகம் அமைப்பின் தலைவர் நீல் சாந்த தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. மடுக்கரை கிராமத்தில் வசதியற்ற தொழிலாளியின் பாடசாலை மாணவியான தீனதயாளன் டிடோதினி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 2ஏ பி சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார். இந்நிலையில் அக்கிராமத்தின் சார்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மாணவி வன்னி மக்கள் காப்பகத்தால் கௌரவிக்கப்பட்டார்.

இந்த மாணவிக்கு பல்கலைக்கழக படிப்பை மேற்கொள்வதற்கு ஆரம்ப நிதி உதவியும், அதனைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் கற்றல் நடவடிக்கைக்கான மாதாந்த உதவித் தொகையும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முல்லைத்தீவு பழம்பாசி, 17ஆம் கட்டை, கரடிப்பிலவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 55 வசதியற்ற பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஜ-110)

## செயற்பட்டு மகிழ்வோம்

தென்மராட்சி, ஜன.29

மிருசுவில் போக்கட்டி அ.த.க. பாட சாலையின் செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் எதிர்வரும் மூன்றாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர். கி.பிரதீபா, மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரிப் பிரதேச சபையின் உப தவிசாளர் செ. மயூரன், தென்மராட்சிக் கல்வி வலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் திட்ட இணைப்பாளர் திருமதி க.மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9,159)



## பொங்கலும் பரிசளிப்பும்

முல்லைத்தீவு, ஜன 29

விசுவமடு தேராவில் முத்து நவரட்ண அறநிதி அமைப்பின் இலவச மாலைநேரப் பாடசாலையின் பொங்கல் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

நிகழ்வில் அறநிதியமைப்பின் நிறுவுநர் திருமதி வத்சலா இரட்ணா பரிசில்களை வழங்கினார். கடந்த 3 ஆண்டுகளாக இயங்கிவரும் இலவச மாலை நேரப் பாடசாலையில் 110 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமையுடன், சத்துணவுத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று நிறுவுநர் தெரிவித்தார். (க-135)

## 'கொரோனா' தொடர்பில்

# விடுதிகளுக்கு அறிவுறுத்தல்!

கொழும்பு, ஜன. 29

'கொரோனா' வைரஸ் தாக்கத்தையடுத்து சுகாதார நடைமுறைகளை பேணுவது தொடர்பில் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா ஹோட்டல் சங்கம் தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதில் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கும் கை கழுவுதல் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மேலும், 'பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களின் நலனை கவனமாகக் கண்காணிக்க வேண்டும்' அத்தோடு நிலைமை மோசமடைந்தால் உடல் வெப்பநிலையை கண்காணிக்க வேண்டும் என ஹோட்டல் உரிமையாளர்களுக்கு இலங்கை சுற்றுலா ஹோட்டல் சங்கம் தெரிவித்துள்ளது. அனைத்து விருந்தினர்களின் தரவுகளை உறுதிப்படுத்த முழுமையான தொடர்புத் தகவல் தேவைப்படுகிறது. இதன் மூலம் சந்தேகத்திற்கிடமான எந்தவொரு நோய்த்தொற்று நபரையும் கண்டுபிடிக்க முடியும். அந்த நபர் தொடர்பு கொள்ளக்கூடிய எவரையும் தொடர்பு கொள்ளலாம். பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்பு இரசாயனங்கள் உடனடியாகக் கிடைக்க கூடியதாக இருக்க வேண்டும்.

விருந்தினர் பகுதிகள், முன் மேசை மற்றும் உணவகங்களில் கை சுத்திகரிப்பு உபகரணம் கிடைப்பதை உறுதி செய்ய ஹோட்டல்களை இலங்கை சுற்றுலா ஹோட்டல் சங்கம் கோரியுள்ளது. 'கொரோனா' வைரஸை எதிர்த்து, விழிப்புடன் இருக்கவும், நல்ல சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது பீதி அடைவதற்கான அறிவுறுத்தல்கள் அல்ல, எச்சரிக்கையாகவும் தயாராகவும் இருக்குமாறு உறுப்பினருக்கு அனுப்பப்பட்ட அறிவுறுத்தல்கள் என இலங்கை சுற்றுலா ஹோட்டல் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் எட்டப்படவுள்ளன. எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் கூட்டம் நடைபெறும்.

மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.


கடந்த டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன. எனினும் முடிவுகள் எடுக்கப்படவில்லை.

வீடமைப்பு திட்டத்துக்கான 475 மில்லியன் ரூபா நிதிஇறைசேரியில் இருந்து விடுவிக்கப்படாமை, தென்மராட்சி பாடசாலைகளின் கூரைகள் திருத்த வேலைகள், யாழ்.பிராந்திய சமுத்திரப் பல்கலைக்கழகத்துக்கு மயிலிட்டியில் 5 ஏக்கர் காணி விடுவிப்பு, பல்கலைக்கழகத்துக்கான நிரந்தர விரிவுரையாளர் நியமிக்கப்படாமை மற்றும் உபகரணப்பற்றாக்குறை, அல்லைப்பிட்டியில் உயர் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க 450 மில்லியன் ரூபா தேவை, கிளிநொச்சி இரணைமடு குடிதண்ணீர்த் திட்டத்தை மேலும் விஸ்தரிக்க நிதி தேவைப்பாடு, வீடமைப்பு அதிகார சபையால் 4 ஆயிரத்து 86 வீடுகளை அமைக்க ஆயிரத்து 85 மில்லியன் ரூபா தேவை, யாழ்.மாநகரசபையின் கல்லுண்டாய் கழிவுக் குதத்தை வேறு இடத்துக்கு இடமாற்றுதல், உள்ளூராட்சி சபைக்குட்பட்ட வீதி விளக்குப் பொருத்துதல் உள்ளிட்ட பல பிரச்சினைகள் ஆராயப்பட்டன. எனினும் முடிவுகள் எய்தப்படவில்லை. இந்தக் கூட்டத்தில் மீள ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

# புங்குடுதீவில் தடுக்கப்பட்டது காணி அபகரிக்கும் முயற்சி

யாழ்ப்பாணம், ஜன.29

**புங்குடுதீவில் தனியார் ஒருவருடைய காணியை அபகரிக்கும் நோக்கில் கடற்படையினர் எடுத்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**



தீவகம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனின் முயற்சியால் கடற்படையின் நடவடிக்கை தடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு எட்டாம் வட்டாரம் மடத்துவெளி ஸ்ரீமுருகன் கடற்றொழில் சங்கத்துக்கு அருகில் தனியார் ஒருவரின் பத்துப் பரப்புக் காணியில் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்படையினர் சிறிய முகாமொன்றை அமைத்திருந்தனர்.

போருக்குப்பின்னர் இந்தக் காணியை விடுவிக்குமாறு உரிமையாளரால் கடற்படையினரிடம் கோரிக்கைவிடப்பட்டது.

எனினும் கடற்படை அதற்கு செவிசாய்த்திருக்கவில்லை. இதனால், காணி உரிமையாளர் தனது குடும்பத்தினருடன் வேறொருவரின் வீட்டிலேயே தற்காலிகமாக வசித்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இந்தப் பகுதியில், முப்பது வீடுகள் அமைப்பதற்கு வீடமைப்பு அமைச்சு ஊடாக நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தது. காணி உரிமையாளர் பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் ஊடாக அந்த வீட்டுத்திட்டத்துக்கு விண்ணப்பித்திருந்தார்.

ஆனாலும் காணி கடற்படையினர் வசமிருந்ததால் வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் மேற்படி முகாமை பெரியளவில் விஸ்தரிக்கும் செயற்பாடுகளை கடற்படையினர் முன்னெடுத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கு எதிராக நேற்றுக் காலை பிரதேச சபை உறுப்பினர் நாவலனின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன் , ஊர்காவற்றுறை பெனடிக்ற் ( சின்னமணி ) , கரம்பொன் நியூட்டன் உள்ளிட்ட தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், அப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்கள் இணைந்து இந்த முற்றுகை போராட்டத்தில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதி கிராம அலுவலர், தீவகம் தெற்கு பிரதேச செயலக அதிகாரிகள் , ஊர்காவற்றுறை பொலிஸார், புங்குடுதீவு கடற்படை முகாம் பொறுப்பதிகாரி போன்றோர் சம்பவ இடத்தக்கு வரவழைக்கப்பட்டனர். அதன்பலனாக முகாமை மேலும் விஸ்தரிக்கும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது . காணி விவகாரம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் காணி உரிமையாளரால் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நவாலி தெற்குக்கு வேண்டும் ஒரு பொது நோக்கு மண்டபம்

யாழ்ப்பாணம், ஜன. 29


நவாலி தெற்கு மட்டுமன்றி நவாலி வடக்கிலும் பொது அமைப்புக்கள் பொதுமக்கள் ஒன்று கூடுவதற்கு பொது மண்டப வசதி இன்றி அங்குள்ளவர்கள் சிக்கலை எதிர்கொள்கின்றனர்.

பொதுநோக்கு மண்டபம் அமைக்க காணியும் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பொதுநோக்கு மண்டபம் அமைத்துத் தருமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை தலைவரை நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் கோரியுள்ளது.

இதேவேளை, நவாலியில் தற்போது இடம்பெறும் கூட்டங்கள் நவாலி தெற்கு ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலைய பழைய கட்டடத் தொகுதியிலேயே இடம்பெறுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-50)

## சரஸ்வதி சிலை திறப்பும் மெய்வன்மைப் போட்டியும்





கொடிகாமம்,ஜன. 29

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் சரஸ்வதி சிலை திறப்பு விழாவும், வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் ப.தர்மபூபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன். சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் அரசினர் வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் சோ.சிறிகாந்தன்,தென்மராட்சி கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவன் க.பிரபாகரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிவனேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள், பரிசில்கள் மற்றும் வெற்றிக் கேடயங்கள் என்பன வழங்கப்பட்டன.நிகழ்வில் பிரதம விருந்தினர் சரஸ்வதி சிலையை திரை நீக்கம் செய்தார். சிறப்பு விருந்தினர் சோ.ஸ்ரீகாந்தன் பெயர்பலகையை திரைநீக்கம் செய்தார். (ஐ-159)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி(பேய்ச்சி) அம்பாள் ஆலய மகா குடமுழுக்கு (கும்பாபிஷேகம்)... 

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

மன்னார் கள்ளியடியை வசிப்பிடமாக கொண்ட மறைந்த சண்முகம் அமுர்தலிங்கத்தின் 2 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளது.


மன்னார் மாவட்ட மாட்டு வண்டி சவாரி சங்கத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்னார் மாந்தை இரட்டை மாட்டுவண்டி சவாரித் திடலில் இந்தப்போட்டி நடைபெறவுள்ளது.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்று ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (ஐ-56)

## காற்றாலை கோபுரம் அமைக்க பாடசாலைச் சமூகமும் எதிர்ப்பு

சாவகச்சேரி ஜன. 29

மறவன்புலவு கடலேரிப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தின் கோபுரத்தை அமைப்பதற்கு அந்தப் பகுதி பாடசாலைச் சமூகமும் நேற்று தமது எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.




மறவன்புலவு சகலகலா வல்லி வித்தியாலய மாணவர்களும் பெற்றோரும் இணைந்தே நேற்று இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வித்தியாலய முன்றிலில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் காற்றாலை அமைக்கப்படக்கூடாது என்று பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பல போராட்டங்களை மேற்கொண்டிருந்த நிலையில் பாடசாலையில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுவரும் காற்றாலைக் கோபுரத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலைச் சமூகம் நேற்றையதினம் போராட்டத்தில் குதித்தது.

இந்தப் போராட்டம் பலரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

வீதிக்கு இறங்கிய பாடசாலைச் சமூகத்திடம் பேசுவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் ஒரு குழுவினர் அங்கு சென்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதன் அடிப்படையில், பாடசாலை மீள இயங்கியது எனத்தெரிவிக்கப்பட்டது.

**பின்னணி**

மறவன்புலவுப் பகுதியில் காற்றாலை நிறுவனத்தால் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது. அது தொடர்பில், பிரதேசத்துக்கு பெரும் ஆபத்து உள்ளதோடு, மக்களுக்கும் பாதிப்புள்ளது என்றுதெரிவிக்கப்பட்ட நிலையில்மக்கள் அந்த காற்றாலை நிறுவனத்துக்கு எதிராக பல போராட்டங்களை மேற்கொண்டனர். (ஐ9)

# பதுளையில் பெண்ணொருவர் குத்திப் படுகொலை!





பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுளை கயில கொட பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்குள் நேற்று நுழைந்த மர்ம நபர்கள் அங்கிருந்த பெண்ணொருவரைக் குத்திக் கொன்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகமூடி அணிந்து கொண்டு இளைஞர்கள் அந்த வீட்டிலிருந்து ஓடி வருவதை அயல் வீட்டில் இருந்த பெண் ஒருவர் பார்த்துள்ளார் எனப்க பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்தவர் 48 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான அங்கப்பன் கௌரி என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த பெண் ஆலயத்திற்குச் சென்று வீடு திரும்பியவுடன் மூன்று இளைஞர்கள் வீட்டிற்குள் பிரவேசித்து மேற்படி கொலையைச் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம)


## புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம் பரிபாலனசபை

## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 08.02.2020 ஆம் திகதி (தீர்த்தத்திருவிழாவன்று) பிற்பகல் 2.30 மணியளவில் ஆலய வளாகத்தில் சபையின் தலைவர் ச.தனபாலசிங்கம் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெறவுள்ளது. எனவே ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் யாவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

- தேவாரம்
- தலைவர் உரை
- செயலாளர் அறிக்கை வாசித்தல்
- பொருளாளர் அறிக்கை வாசித்தல்
- ஆலய வளர்ச்சி தொடர்பான கருத்துரைகள்
- புதிய நிர்வாக சபைத்தெரிவு
- நன்றியுரை

**தனபாலசிங்கம்**
**தலைவர்**

(CS/308829)(11,17)

**சுந்தரலிங்கம்**
**செயலாளர்.**




# நாய்களை திறந்து விட்டவர் யார்? விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.29

தெல்லிப்பழை மருத்துவமனையில் நடமாடும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அடைத்து வைத்திருந்த போது, அவை திறந்து விடப்பட்டமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மருத்துவமனை வளாகத்தில் அதிக நாய்கள் நடமாடுவதால், மீனில் மயக்க மருந்து வைத்து பெரும் சிரமத்தின் மத்தியில் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு, மருத்துவமனை வளாகத்தில் கூண்டில் அடைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் காப்பகம் கொண்டு செல்வதற்காகப் பிடிக்கச் சென்ற போது, அந்த நாய்கள் கூண்டிலிருந்து திறந்து விடப்பட்டிருந்தன. நாய்களைக் கூண்டில் இருந்து தப்பிக்க விட்டவர்கள் தொடர்பில் கடும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் தாதிய உத்தியோகத்தரின் பணிப்பில், சுத்திகரிப்பு ஊழியர் ஒருவர் கூண்டைத் திறந்து விட்டுள்ளார். அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)


## கண்ணீர் அஞ்சலி

## மாணிக்கம் ஆனந்தகுமார்

**(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை)**



தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இறைபதம் அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்துக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**அதிபர்,ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.**
**யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்.**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வணிகத்தில் முதலாம் தேர்வு (வெளிவாரி) - 2017**
**முதலாம் அரையாண்டுப் பரீட்சை**

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தகுதியான மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை 29.01.2020 ஆம் திகதியிலிருந்து அலுவலகநேரத்தில் திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அல்லது www.codl.jfn.ac.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேற்படிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை 02.02.2020 இற்கு முன்னர் திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம். மேற்படி பரீட்சைக்கான நேர அட்டவணை தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

**குறிப்பு :-** மீள் பரீட்சார்த்திகள் பாட அலகொன்றுக்கு ரூபா 1500.00 வீதம் மக்கள் வங்கிக் கிளையொன்றில் பணத்தினைச் செலுத்தி. செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலகநேரத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதிவாளர்**
**திறந்தமற்றும் தொலைக்கல்விநிலையம்.**
**27.01.2020**

(IN/12415)(11,17)



யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 1 ஆம் ஒழுங்கையில் மேல்மாடி வீடு 2 அறைகள், சமையலறை, HALL, குளியலறை, தனிப்பட்ட மின்சார இணைப்புகளுடன் வாடகைக்குண்டு.

தரகர் வேண்டாம். **077 521 7772**



## தென்னந்தோட்டம் விற்பனைக்கு

**தாளையடி வீதி, மாசார், பளை.**

39 ஏக்கர், 2 அறைகள், 2 குளியலறைகள் கொண்ட வீடு, மும்முனை மின்சாரம், 4 குழாய்க்கிணறுகள், இருகட்டுக் கிணறுகள், சொட்டு நீர்ப்பாசனம் 1500 தென்னம் கன்றுகள், 350 மரமுந்திரிகைக் கன்றுகள் என்பன அடங்கலான தோட்டம் விற்பனைக்கு உண்டு.

**076 809 8627** (CS/36775)(11,17)



பின்னுறுதித் தீர்வை

## வவுனியா மாவட்ட நீதிமன்றில்

பகீரதன் வித்தியாகலை
இல.39,
கல்வியற்கல்லூரி வீதி,
2 ஆம் ஒழுங்கை,
அண்ணாநகர், வவுனியா.
**வழக்காளி**

எதிர்

**வழக்கு இல :- D341/16**
**தன்மை :- மணவிலக்கு**

விஜயபாலன் பகீரதன்
திருச்செந்தூரன் மில் வீதி,
உக்குளாங்குளம்,
வவுனியா.
தற்போது
வவுனியா சிறைச்சாலை,
வவுனியா
எதிராளி

இவ்வழக்கு 21.06.2019 ஆம் திகதியன்று கௌரவ வவுனியா மாவட்ட நீதிபதி அப்துல் மஜீத் முகமது றியால் அவர்கள் முன்னிலையில் வழக்காளி பிரசன்னமாக இருக்க வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி நிறஞ்சினி அவர்கள் தோன்றவும் எதிராளிக்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டு எதிராளி மற்றும் எதிராளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி செல்வி. அ.தர்ஷினி தோன்றியிருந்து மறுமொழி அணைத்து குறித்த வழக்கினை எதிர்த்து வாதிடவில்லை எனத் தெரிவித்ததனை அடுத்து கௌரவ மன்றானது வழக்கினை ஒருமுக விளக்கத்துக்கு நியமித்து வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி 3072 ஆம் இலக்கத்தில் வவுனியாவில் வைத்து நிறைவேறிய பதிவுத் திருமணத்தை மேற்குறித்த எதிராளி வழக்காளியை வன்ம உறவறுத்து ( Malicious Desertion ) வாழ்ந்து வருகின்றார் என்ற ஏதுவின் மீது குலைத்து இரத்துச் செய்து இத்தால் கட்டளையிட்டு தீர்ப்பளிக்கின்றது.

இப்பின்னுறுதித் தீர்வை பதியப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்தினுள் எதிராளி எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காத பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் 21 ஆம் திகதி

**வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி.**

**மாவட்ட நீதிபதி, வவுனியா.**

**குறிப்பு:-** ஒருமுக விசாரணைக்கான தீர்ப்பினை இரத்துச் செய்வதற்கான விண்ணப்பம் இத்தீர்வை கிடைக்கப்பெற்று 14 நாள்களுக்குள் செய்யப்பட வேண்டும் என குடியியல் நடபடிமுறைக்கோவை பிரிவு 86(2) தேவைப்படுகின்றது (AVA/643)(11,17)



## மரண அறிவித்தல்

## பிரான்சிஸ் மாசிலாமணி திரேசம்மா



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் மாசிலாமணி திரேசம்மா 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் மாசிலாமணியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் நவம், காலஞ்சென்றவர்களான பேளி, சேவியர், றூபி மற்றும் யோகராணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அன்ரனி, ஜேசிலி, அல்பிரட் (மைனர்), மெற்றலின் (மன்றானி), காலஞ்சென்ற ஜேசுதாசன் மற்றும் றோஸ்மலர், வேதநாயகம் (பிரான்ஸ்), வசந்தகுமார் (பிரான்ஸ்), கிளேற்றா ஆகியோரின் அன்புத் தாயும், தேவமலர், காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான டேவிட், மார்க்கண்டு (பண்டா) மற்றும் வசந்தி (பிரான்ஸ்), கொலஸ்ரிக்கா (பிரான்ஸ்), தேவா ஆகியோரின் அன்பு மாமியும், லெனிசியா (பிரான்ஸ்), நிவியா (பிரதேச செயலகம்), குணசீலன் (லண்டன்), அனுசியா (பிரான்ஸ்), ஜெயசலா (கனடா), நிரோஜா, றொபேட் (பிரான்ஸ்), ரேணுகா, டொனால்ட், றெஜினோல்ட் (லண்டன்), சுரேஷ், பிறங்கிலா (பிரான்ஸ்), சுஜோலா (பிரான்ஸ்), கபிரியலா (பிரான்ஸ்), டிறோன் (பிரான்ஸ்), டிலக்ஷன் (பிரான்ஸ்), டிலானி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டொனால்ட், குளோறன், அஸ்விதா, அஸ்ரித், கெனித், றிசிக்கா, ரோகித், ரித்திஷா, கபிஷன், கபிஷனா, றொசேல், எய்டன், அரோன், யதுஷா, பபிஷாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (29.01.2020) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## செயற்குழு தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.29

சரவணை பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப் பிரார்த்தனை சபையின் புதியசெயற்குழுத்தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராகப் பொன்னையா பேரின்பநாயகம், உப தலைவராக திருமதி தேவநாதன் ஸ்ரீபாலஜெகதீஸ்வரி, செயலாளராக திருமதி கைலாசபதி நித்தியலட்சுமி, உப செயலாளராக அருணகிரிநாதன் சிவரூபன், பொருளாளராக செல்வரெட்ணம் ஜெயகாந்தன், உறுப்பினர்களாக திருமதி ஸ்ரீகந்தராசா மலர்விழி, திருமதி முகிலன் சிவாஜினி, கைலாசபதி பிரியங்கா, ஜெ.தர்சன் ஆகியோரும், காப்பாளர்களாக ச.மகாலிங்கம், த.அருணகிரிநாதன் ஆகியோரும், கணக்காய்வாளராக திருமதி றமணன் கலைச்செல்வியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று செயலாளர் கை.நித்தியலட்சுமி அறிவித்துள்ளார். (க)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்.ஜன.29

யாழ்.மாவட்ட பனை- தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அதன் ஊழியர் நலன்புரிச்சங்கமும் இணைந்து நடத்தும் வருடாந்த ஒன்றுகூடலும், மதிப்பளித்தல் நிகழ்வும் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு சமாசக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறும். தலைவர் பொ.செல்வராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமாசத்தலைவர் வ.தெய்வேந்திரம் கலந்து கொள்வார். (க-63)

## புகைப்படக் கண்காட்சியை இன்றும் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம்.ஜன.29

'யாழ்ப்பாண பழங்கால ஒளிப்படங்களின் திருவிழா 2020" என்னும் புகைப்படக் கண்காட்சி மேலும் இரு நாள்களுக்கு நீடிக்கப்பட்டு இன்று வரை நடைபெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தந்தை செல்வா அரங்கில் ஆரம்பமான இந்தக் கண்காட்சி 3 நாள்கள் நடைபெற்றது. அநேகரின் வேண்டுகோளுக்கு அமைய கண்காட்சி மேலும் இரு நாள்களுக்கு நீடிக்கப்பட்டு இன்றுவரை நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் 1800 களின் இறுதியில் முதலாவது தலைமுறைக் கலைஞரான எஸ். கே. லோட்டன் கனகரட்ணம் பயன்படுத்திய ஒளிப்படக் கருவி உட்பட 50 இற்கு மேற்பட்ட பழைய ஒளிக்கருவிகளின் பாகங்கள், பழைய ஒளிப்பட கலையகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் பழைய புகைப்படங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-20)

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-11 மூத்தவிநாயகர் கோவில் வீதி இரண்டாம் ஒழுங்கை ஆதன இலக்கம் 15. என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் சின்னையா சரவணைமுத்து என வரிமதிப்பு பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் குறிப்பிடப்படுகின்ற "இத்தித் தோட்டம் "நில.பர.11 3/4 இல் சொரியலான 1/8 இனை அருணாச்சலம் அம்பலம் தனது மகளான சின்னையா கைம்பெண் அன்னம்மாவுக்கு பிரசித்த நொத்தாரிசு க.தி.குமாரசாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட இல 7961/1946.07.20 திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

அதன் பின்னர், சின்னையா கைம்பெண் அன்னம்மா காலமாகிய நிலையில், நல்லூர் மூத்த விநாயகர் வீதியைச் சேர்ந்த சரவணைமுத்து சக்திவேலும் சரவணைமுத்து சத்திய மூர்த்தியும் பிரசித்த நொத்தாரிசு இரா.இராஜேஸ்வரன் முகதாவில் உறுதி இல.1452/06.08.2014ல் எழுதப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனம் தமது பிதாவழி முதுசம் என வெளிப்படுத்தி சகோதரர் சரவணைமுத்து கருணாகரனுக்கு சொரியல் ஆதனத்தினை நிந்தப்படுத்தி நில.பர.2 குளி 12.67 விஸ்தீரணம் உடைய ஆதனத்தினை வழங்கியுள்ளார்.

சரவணைமுத்து கருணாகரனும் மனைவி வேனுசுதாவும் பிரசித்த நொத்தாரிசு இரா. இராஜேஸ்வரன் முகதாவில் எழுதப்பட்ட உறுதி இல 2622.28/10/2015ம் திகதியிடப்பட்ட உறுதி மூலம் விஜயரட்ணம் குகனுக்கும் மனைவி சிந்துஜாவுக்கு அறுதியாக விற்கின்றனர்.

நல்லூர் மூத்த விநாயகர் வீதி தற்போது கனடாவில் வசிக்கும் சரவணைமுத்து சக்தி வேலும், சரவணைமுத்து சத்தியமூர்த்தியும், சரவணைமுத்து கருணாகரனும் விஜயரட்ணம் குகனும் பெண் சிந்துஜாவும் சின்னையா கைம்பெண் அன்னம்மாவின் வாரிசுரிமை தொடர்பிலும் ஆதனம் நிந்தப்படுத்தப்பட்டமை தொடர்பிலும் பிரசித்த நொத்-தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் எழுதப்பட்ட 434ம் இலக்க 16.05.2018ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தல் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

**ஆதன விவரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் இறை "இத்தித்தோட்டம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.கே.சிவநாதன் அவர்களால் 24.06.2013 திகதி அளந்து வரையப்பட்ட 3004ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1 நிலப்பரப்பு இரண்டு குளி பன்னிரெண்டு தசம் ஆறு ஏழு (நில.பர.02குளி12.67) இதற்கு எல்லை.

தற்போது விஜயரட்ணம் குகனும் பெண் சிந்துஜாவும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது விஜயரட்ணம் குகன் பெண் சிந்துஜா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர்**
**மாநகரசபை.**

(IN/12411)(11,17)

# மரண அறிவித்தல்

## திருமதி அமரசிங்கம் திரேசா றீற்றம்மா

### (ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் புத்தூர், ஜேர்மனி ( Dortmund) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அமரசிங்கம் திரேசா றீற்றம்மா கடந்த 27.01.2020 திங்கட்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ந.அமரசிங்கத்தின் பாசமிகு மனைவியும், மேரி மார்க்கிரட் (ராணி), காலஞ்சென்ற றீற்றா இமானுவேல் (ராசாத்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ந.தலையசிங்கம், ந.பஞ்சாட்சரம், ந.தவமணி மற்றும் ந.சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மதிவதனி (ஜேர்மனி), பதிஅமரன் (ஜேர்மனி), பவிபிரேமராஜன் (லண்டன்), பிரேமலதா ( ஜேர்மனி), துஷ்யந்தன் (உரிமையாளர் U.S.Hotel & Restaurant), ஜெயாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திரராஜா (ஜேர்மனி), கிருஷ்ணராணி (ஜேர்மனி), சுஷானா (லண்டன்), அம்பிகாவதி (ஜேர்மனி), விஜிதா (ஜேர்மனி), அருள்பின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2020) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.08.1934 | 27.01.2020 |

**இல.855, வைத்தியசாலை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 30887) (11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

புதன் பொய்கை


ஜனவரி 29 2020

செய்யத் துடிப்பது எனக்கு மிகவும் பிடித்தமானது. வெறுமனே தெரிந்துவைத்திருப்பது போதாது. கற்றதை நடைமுறைப்படுத்திப் பார்க்க வேண்டும். விருப்பத்துடன் மட்டும் இருந்தால் போதாது. அதைச் செய்தாக வேண்டும்.

லியார்னாடோ டா வின்சி







இரா.நிஷாந்தன்
ஆசிரியர்
இராமநாதபுரம் ம.வி

# யாழ்ப்பாணத்தில் சிறப்புப்பெறும் சிவபூமி தொல்பொருள் அருங்காட்சியகம்

தமிழர் தம் வாழ்வியலின் தனித்துவமான வரலாற்று அம்சங்களையும், கலை சார்ந்த பண்பாட்டம்சங்களையும் கொண்டமைந்த தொல்பொருள் அரும் காட்சியகம் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம்நாவற்குழியில்அண்மையில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் வாழும் தமிழர் தம் பகுதியில் இதுவரை முழுமையானதும் நிறைவானதுமாகிய ஓர் அருங்காட்சியகம் அமையப் பெற்றிருக்கவில்லை. அந்தக் குறையைப் போக்கிடும் வகையில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின் செயலூக்கத்தின் காரணமாக யாழ்ப்பாணத்தின் நாவற்குழியில் சிவபூமி திருவாசக அரண்மனையின் முன் வளாகத்தில் இந்த அற்புதமான தொல்லியல் சார்ந்த அருங்காட்சியம் அமையப்பெற்றுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

இந்த அருங்காட்சியகம் தமிழர் தம் வாழ்வில் மறந்துபோன அல்லது மறைக்கப்பட்ட பல பழமையான அம்சங்களை மீண்டும் எம் கண்முன்னே கொண்டுவந்து காண்பித்திருக்கின்றது எனலாம். உண்மைக்கும் இது இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு கிடைக்கப்பெற்றுள்ள ஓர் வரப்பிரசாதமாகும். இன்றைய எம் இளம் சந்ததியினர் தமிழர் தம் வீரம் செறிந்த வரலாற்றையும், அவர்கள் கடைப்பிடித்த எமது பாரம்பரிய பண்பாட்டம்சங்களையும் இதன் மூலம் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அது மட்டுமன்றி அடுத்து வரும் சந்ததியினருக்கும் இதனை கையளிப்பதற்கு வழிசமைத்ததாய் இந்த அருங்காட்சியகம் விளங்கும் என்றால் மிகையாகாது.

**அரும்காட்சியகத்தின் அமைப்பியல்**

மூன்று தளங்கள் அதாவது மூன்று மாடிகள் கொண்டதாக இந்த அரிய அருங்காட்சியகம் அமைவுற்றிருக்கின்றது. ஒவ்வொரு தளத்திலும் ஒவ்வொரு சிறப்புப் பொருந்திய பழமையான அம்சங்கள் நிலைபெற்றுள்ளன. அந்த மண்டபத்தின் முன்புறத்தில் அதாவது திறந்தவெளியில் அழகிய நீர்த்தடாகம் அமைக்கப்பெற்றுள்ளது. அந்த நீர்த்தடாகத்தை சுற்றி இலங்கையை ஆட்சி செய்த வீரம் மிகுந்த தமிழ் மன்னர்களின் உருவச் சிலைகள் கம்பீரமாய் தோற்றம் கொள்கின்றன. இத்தகு நீர்த்தடாகத்தின் இரு பக்கங்களிலும் நீண்ட மண்டபங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் இலங்கையில் கிட்டத்தட்ட 1950 காலப்பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்து வாகனங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கண்களுக்கு வியப்பை தருவதாய் பிரமாண்டத்தின் உச்சம் தொடும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமையப் பெற்றுள்ளது.

**அருங்காட்சியகத்தின் முதலாவது தள்ம்**


அருமையான இந்த அருங்காட்சியகத்தின் முதலாவது தளத்தில், தமிழரின் பாரம்பரிய வாழ்வியலுடன் தொடர்புடைய பல பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தளத்தின் மத்தியில் மிகப் பெரியதொரு நடராஜர் சிலை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதனோடு இங்கு மக்கள் முற்காலத்தில் பயன்படுத்திய பல பொருட்களை காணமுடிகின்றது. அவ்வகையில் கிட்டத்தட்ட 1950இன் பின் வாழ்ந்த மக்களால் பயன்படுத்தப்பட்ட பல வகையான வானொலிப் பெட்டிகள், புகைப்படக் கருவிகள், நாணயங்கள், தொலைபேசிகள், கடிகாரங்கள், கடவுளர் சிலைகள், பாத்திரங்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள், தளபாடங்கள், நெசவுத் தொழில் உபகரணங்கள், மற்றும் இன்னும் பல பொருட்களை இந்த முதல் தளத்தில் கண்டு வியப்புக் கொள்ள முடியும்.

**அருங்காட்சியகத்தின் இரண்டாவது தளம்**

முதலாவது தளத்தில் உள்ளவற்றை பார்வையிட்டு இரண்டாவது தளத்திற்கு சென்றால் அங்கு தமிழர் தம் வாழ்வியலில் சிறப்புற்ற பல புகைப்படங்களின் தொகுப்பினைக் காண முடிகின்றது. ஈழத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்த்தெடுத்த சமயப் பெரியார்கள், புலவர்கள், பாவலர்கள், பண்டிதர்கள், மற்றும் உபாத்தியாயர்கள், தலைவர்கள் எனப் பலரது புகைப்படங்கள் கண்களுக்கு


















களிப்பினைக் கொடுக்கின்றன எனலாம். மேலும் இலங்கையில் உள்ள பழமையான இந்து ஆலயங்களின் ஆரம்ப கால தோற்றங்கள் மற்றும் அவ் ஆலயங்களின் வரலாறுகள் சார்ந்த புகைப்படங்கள், இந்து ஆலயங்களில் இடம்பெற்ற கலை கலாசார நிகழ்வுகளின் புகைப்படங்கள் என்பனவும் இங்கு அணி சேர்த்துள்ளன. இவை தவிர பழங்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்துள்ள பல வகையான பத்திரிகைகளும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும





**அருங்காட்சியகத்தின்**
**மூன்றாவது தளம்**

இரண்டாவது தளத்தில் பார்வையைச் செலுத்திய எம் கண்கள் மூன்றாவது தளத்திற்கு சென்றால் அங்கு மேலும் எம் கண்களுக்கு விருந்தளிப்பனவாக பல ஓவியங்கள் நிறைந்திருக்கின்றன. யாழ்ப்பாண பல்கலைக் கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை சார்ந்த மாணவர்களால் வரையப்பட்ட தமிழர் தம் வாழ்வியல் மற்றும் கலை, பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொணரும் ஓவியங்கள் இங்கு அணி சேர்க்கின்றன. குறிப்பாக தமிழர்கள் கடைப்பிடிக்கும் பண்டிகைகள், ஆலய திருவிழாக்கள், சமயச் சடங்குகள், விவசாயம் உட்பட்ட பல வகையான தொழில்கள், கிராமிய விளையாட்டுக்கள், கிராமிய மக்களின் வாழ்க்கை முறை, உணவு முறைகள், ஆடை அலங்காரங்கள், குடும்ப வாழ்க்கை என இன்னும் பலவற்றை ஓவியங்களாக இந்த மூன்றாவது தளத்தில் நாம் கண்டு ரசிக்க முடியும்.



**அருங்காட்சியகத்தின்**
**திறந்தவெளி காட்சியமைப்பு**

அருங்காட்சியகத்தின் முன்புறம் திறந்தவெளியில் கண் கவரும் வகையில் அழகிய நீர்த்தடாகம் ஒன்றும் அதைச் சுற்றி யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த வீரமும், தீரமும் கொண்ட 21 தமிழ் மன்னர்களின் உருவச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களது ஆட்சிக்காலம் என்பனவும் அங்கு பொறிக்கபட்டுள்ளன. அவ்வகையில் பண்டாரவன்னியன், சங்கிலியன், எல்லாளன், பரராசசேகரன், செகராசசேகரன் உட்பட்ட தமிழ் மன்னர்களின் உருவச் சிலைகள் கம்பீரத்துடன் அணி சேர்க்கின்றன. இது தமிழர்களின் வீரம் செறிந்த வரலாற்றுப் பதிவாக்கத்தினை எமக்கு தெளிவுறுத்துவனவாக அமையப் பெற்றுள்ளன என்றால் மிகையில்லை. மேலும் திறந்தவெளிக் காட்சியகத்தின் இரு பக்கங்களின் மண்டபங்களில் 1950ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட பல வகையான கார்களும், பல வகையான வண்டில்களும் மற்றும் இதர பல போக்குவரத்து சாதனங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.


**தமிழரின் தனித்துவத்தை**
**பறைசாற்றும் அருங்காட்சியகம்**

வரலாற்றுப் பதிவாக அமையப்பெறும் இந்த அருங்காட்சியகத்தில் தற்போது குறிப்பிட்ட அளவிலான பழமையான அம்சங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன. விரைவில் இன்னும் பல தொன்மையான சிறப்பம்சங்கள் பல இங்கு அணி சேர்க்கப்பட உள்ளன.

அவ்வகையில் இந்த அருங்காட்சியகம் மேலும் உயர்வு பெறும் என்பது திண்ணம். தமிழரின் வரலாறும், அவர்தம் பண்பாட்டின் தொன்மையும் என்றும் போற்றத்தக்கதாகும். அவ் வகையில் கடந்த சனிக்கிழமை பிரம்மாண்டமாக திறந்து வைக்கப்பட்ட இந்த தொல்லியல் சார்ந்த அருங்காட்சிகத்தைத் தினமும் மக்கள் பலர் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

ஆக நீங்களும் ஒரு தடவை சென்று இந்த அரிய காட்சியகத்தைப் பார்வையிட முயற்சி செய்யுங்கள். எம் இளஞ் சிறார்களையும் உடன் அழைத்துச் சென்று அவர்களுக்கும் இந்த அரிய சிறப்புக்களை காண்பியுங்கள். தமிழர் வரலாற்றில் நம் கண்டு கொள்ளத் தவறிய பல பழமை சார்ந்த விடயங்களைக் கண்டு மனம் களிக்க முடியும் என்பது உறுதி.




# சிவபூமி அரும்பொருள் காட்சியகத்தில் தமிழ்ச் சங்கத்தின் சிறப்பு நிகழ்ச்சிகள்




நாவற்குழியில் சிவபூமி அரும்பொருள் காட்சியகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினர் வழங்கிய கலை நிகழ்வுகள் தமிழ்ச்சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்றன.

இதில் தமிழ்ச்சங்க உபதலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரை வழங்கினார். தமிழ்ச் சங்கத்தின் பெருந் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புரை ஆற்றினார். மூத்த கவிஞர் சோ.ப.தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது. இதில் த.ஜெயசீலன், ச.முகுந்தன், தர்மினி ரஜீவன், நாக.சிவசிதம்பரம் ஆகியோர் பங்குகொண்டனர்,

தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற பட்டிமண்டபத்தில் வை.விஜயபாஸ்கர், கு.பாலசண்முகன், இ.சர்வேஸ்வரா, ந.ஐங்கரன், தெ.ஹர்சன், ஜீ.சஜீவன் ஆகியோர் பங்கேற்றனர்.

# சமாதான நீதிவான்கள்



நாராயணப்பிள்ளை வேலாயுதம் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார். கிளிநொச்சி நீதிமன்ற நீதிபதி சரவணராஜ் முன்னிலையில் கடந்த 22ஆம் திகதி இவர் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கிளிநொச்சி திருநகர் வடக்கு கிராம அபிவிருத்தி சங்க முன்னாள் தலைவரும் கரைச்சி பிரதேச முன்னாள் மத்தியஸ்தர் குழு உறுப்பினரும், திருநகர் மறுமலர்ச்சி முன்னேற்றத்தின் தலைவரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★



கைதடி வடக்கைச் சேர்ந்த வேதநாயகம் தபேந்திரன் மிக அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலராகக் கடமையாற்றும் இவர் சமூக சேவைகள் உத்தியோகத்தர் சங்கத்தில் 19 வருடங்கள் பொதுச் செயலாளராகக் கடமையாற்றினார். தற்போது உப தலைவராக உள்ளார். கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளர் பதவி உட்பட பல்வேறு பொது அமைப்புகளில் அங்கம் வகித்து வருகின்றார். (222)

வலி.மேற்கு பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அருள்.சிவானந்தன் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார். யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் கடந்த 20ஆம் திகதி இவர் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

அகில இலங்கை ரீதியாக உள்ள பல்வேறு சமூகமட்ட சேவை அமைப்புக்களில் இவர் அங்கத்துவம்வகித்து அதன் மூலம் மக்கள் பணியாற்றி வருகின்றார். குறிப்பாக அகில இலங்கை சைவ மகா சபையின் பொருளாளர், சுழிபுரம் கலைமகள் இலவசக் கல்வி நிலையத்தின் உபதலைவர், கலைமகள் முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் உபதலைவர், கலைமகள் சன சமூக நிலையத்தின் போசகர், மானிடம் அறக்கட்டளையின் பொருளாளர் ஆகிய பொறுப்புக்களை ஏற்று பணியாற்றுகின்றார்.



★ ★ ★



இலங்கை சமாதான நீதிவானாக பெல்மடுள்ள பிரதேச நீதிவான் நீதிமன்றதின் நீதிவான் ரஞ்சலா பெரேரா முன்னிலையில் ஓபாத காவத்தையை பிறப்பிடமாக கொண்ட சுந்தரலிங்கம் பிரதீப் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் ஸ்ரீகிருஷ்ணா மகா வித்தியாலயத்தின் ஆசிரியராகவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய ரீதியிலான உப தலைவராகவும் மக்கள் விடுதலை முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட செயல்பாட்டாளராகவும் பணியாற்றி வருகிறார். (159)



மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் எழுதிய நன்னெறிக்குறள், மூதூர் முன்னேற்றக் காவியம், படகு மூழ்கிய காவியம், தாய்மை உணர்வுகள், மூதூர் சுனாமிக் காவியம், மனையாள் மாட்சிமைக் காவியம், சிறுவர் கவிப்பேழை ஆகிய 7 நூல்களின் முதல் பிரதிகளை நூல் ஆசிரியர் அனஸ், வைத்தியர் சம்பூர் அ. சதிஸ்குமாருக்கு திருகோணமலை பொது நூலகத்தில் வைத்து அண்மையில் வழங்கினார்.



# அவை 57

அல்வாய் கலையகத்தில் அவை கலை இலக்கிய வட்டத்தின் 57ஆவது ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. வண.பிதா ஜே.எஸ்.ஜோசுவா 'சம கால ஈழத்துப் படைப்பிலக்கியங்களில் பேசப்படாத எதிர்வு கூறல்' என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

# ஆறுமுகநாவலரிடம் தவறா? நிரூபிக்கட்டும் இரகுநாதன்!

உதயன் பத்திரிகையில் "எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே" என்ற தலைப்பில் வெளியான, யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் ம. இரகுநாதனின் நியாயப்படுத்தல் சம்பந்தமான வரைதல் இது.

இந்த விடயம் "அனைத்து உலகம்" என்ற சொல் தொடர்பாக எழுந்தது. இந்த "அனைத்து உலகம்" என்ற சொற்பிரயோகம் முன்னர் வழக்கில் இருந்ததில்லை. அண்மைக்காலமாக சில வித்துவான்களால் நுழைக்கப்பட்டு வருகின்றது என்பதுதான் உண்மை.

இவ்விடயம் இந்த அளவில் நிற்க. இரகுநாதனின் நியாயப்படுத்தலின் இறுதிப் பகுதியில் "யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரின் கந்தபுராணப் பதிப்பில்கூட தவறுகள் இருக்கின்றன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். ஆறுமுகநாவலரின் கந்தபுராணப்பதிப்பில் எதுவித தவறுகளும் இல்லை என்பது எனது நம்பிக்கை.

ஆதலால் தாங்கள் நாவலரின் கந்தபுராணப் பதிப்பில் கண்ட தவறுகள் மற்றும் எந்தப் பகுதியில் அவை எவ்வாறான தவறுகள் என்பன பற்றிய முழுவிவரங்களையும், அதற்குத் தாங்கள் காட்டும் சான்று மற்றும் ஆதாரங்களையும் கந்தபுராணத்தைப் பாராயணம் செய்து வரும் என் போன்றவர்கள் யாவரும் அறிந்து தெளிவு பெறுவதற்காக இந்த உதயன் பத்திரிகையின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

**கலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை பசுபதி**
(குடாநீரூரான்)





# புதுக்குடியிருப்பில் சிறப்பாக இடம்பெற்ற கலை நிகழ்வு

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளை யாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து நடத்திய கலை நிகழ்வு புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்புவிருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் வலயக் கல்விப்பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் தமிழர்களின் பாரம்பரிய இசை வாத்தியங்கள் காவடிகளுடன் அழைத்துவரப்பட்டுக் கலை நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

வவுனியா வேல்ஆனந்தனின் ஆடலமைப்பு நெறியாள்கையில் வவுனியா ஆடல் அணியினர் வழங்கிய கரையேற மறுக்கும் ஓடங்கள் கீழைத்தேச ஆடல்கலை அரங்கேற்றப்பட்டுள்ளதுடன்,

இந்தியாவின் பிரபல வீணை இசைக்கலைஞர் திருமதி யோகா குழுவின்ரது வீணை இசை நிகழ்வும் அரங்கேற்றப்பட்டுள்ளது. (ம-19)



# நீ எனக்கு பேரழகு...

அழகா அழகா பூவழகா
பூ வாசம் அது அழகா
கலை அழகா சிலை அழகா
சிலை வடித்த விரல் அழகா

செடி அழகா கொடி அழகா
இளந்தென்றல் நடை அழகா
வானம் அழகா நீளம் அழகா
நந்தவனம் அது அழகா

தேர் அழகா தெரு அழகா
தேர் இருக்கும் ஊர் அழகா
காய் அழகா கனி அழகா
செங்கனி தான் தனி அழகா

நதி அழகா நதி அழகா
நதி துள்ளும் நீர் அழகா
மதி அழகா விதி அழகா
விதி வெல்லும் மதி அழகா

கண் அழகா கண் அழகா
கண் காக்கும் இமை அழகா
விழி அழகா மொழி அழகா
விழி பேசும் மொழி அழகா

இதழ் அழகா இதழ் அழகா
இதழ் சிந்தும் தேன் அழகா
தேன் அழகா தேன் அழகா
தித்திக்கும் தேன் அழகா

அழகா அழகா அறிவுலக
பூ அழகா போட்டு அழகா
பொன் அழகா சொல் அழகா
நீ பேசும் சொல் அழகா

யார் அழகு யார் அழகு
யார் யாருக்கோ யார் அழகு
நீ அழகு நீ அழகு
நீ எனக்கு பேரழகு...

யார் அழகு யார் அழகு
யார் யாருக்கோ யார் அழகு
நீ அழகு நீ அழகு
நீ எனக்கு பேரழகு...

-இப்படிக்கு அழகு

# தமிழ் தந்த தாமோதரம்

**செ.விசுவலிங்கம்**
*புத்தூர் விஸ்வம்*

தென்னாசிய நாடுகளில் தனது சாம்ராச்சியத்தை நிலை நிறுத்திய சோழப் பெருமன்னன் இராசராச சக்கரவர்த்தி காலத்தில் சிதம்பரத்திலே உள்ள அறை ஒன்றில் கவனிக்கப் படாமல் கறையான் புற்றுக்களால் சூழப்பட்டுக் கிடந்த தேவாரதிருப்பதிகங்களை நம்பியாண்டார் நம்பி என்ற அடியவர் தேடிப்பெற்று மாமன்னர் முன்னிலையில் அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்து தமிழையும் சைவத்தையும் காப்பாற்றி உதவினார்.

அதேபோலப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சி.வை.தாமோதரம்பிள்ளை என்ற தமிழ் அறிஞரும் கவனிப்பாரற்றுக் கறையான்களுக்கு இரையாகிக்கொண்டிருந்த சங்க இலக்கியங்களைத் தேடிப்பெற்று அச்சிலேற்றி சாதனை புரிந்தார்.

இன்று செந்தமிழ் மொழி உலகின் தொன்மை மிக்க பழைய இலக்கிய இலக்கண நூல்களைக் கொண்டு செம்மொழியாக தலை நிமிர்ந்து நிற்கின்றது. இவ்வழியில் போற்றுதற்குரிய தமிழ்த் தாயின் தவப் புதல்வன் சி.வை.தா. என்பது மிகையாகாது. சி.வை.தாவின் சிறந்த தமிழ்ப் பணிகளை பண்டிதமணி கணபதிப்பிள்ளை தனது நூல்களில் ஆணித்தரமாக நிறுவியுள்ளார் பல்கலைக்கழகப் பேராசிரியை முனிவர் மனோன்மணி சண்முகதாஸும் இதுபற்றி விரிவான ஆராய்ச்சிநூல் வெளியிட்டுள்ளார். இதன் பகுதிகள் எமது முன்னைய கலை கலாசார மன்றத்தின் விழா மலரின் மறுபிரசுரம் ஆகியது சிறுப்பிட்டியூர் ஆசிரியர்களான சைவப்புலவர் அமரர் இ.செல்லத்துரை சங்கீத கலாபூஷணம் அமரர் திரு.பொ.இளையதம்பி ஆகியோரும் சி.வை.தா. பற்றிய சிறிய நூல்களை வெளியிட்டுள்ளனர்.






# இலங்கையில் அரியதைப் பெரிதுவக்கும் நூதனசாலைகள்







கே.எஸ்.சிவஞானராஜா

மனித இனம் வாழ்ந்த பூர்வீகத்தையும், அவை சார்ந்த பண்பாட்டுப் பொக்கிசங்களையும், தொழில் மேவும் சாதனங்களையும், பொருளாதார ஆதாரங்களையும் தனதாக்கி வரலாற்று உண்மைகளை அடுத்த சந்ததிக்கு ஒப்படைத்து வியக்க வைக்கும் கூடங்களே நூதன சாலைகள் ஆகும். புராதன முதுசொம்கள் ஒவ்வொன்றும் கோடி பெறுமதியானவை என்பதை நவீனத்தவ ஆய்வாளர்கள் வரவேற்று எம்மை வசீகரிக்கின்றார்கள். கடந்தகால போரின் நிமித்தம் வடக்கு, கிழக்கில் ஏராளமான வாழ்வியல் சான்றுகள் அழிந்தும் மறைந்தும் வெந்தும் போயின. இதனால் தமிழர் தடங்கள் முடங்கியும் அடங்கியும் உள்ளன. தற்போது கைவசம் இருப்பவற்றைப் பேணுவது மாகாண மத்திய மாநகர நிர்வாகங்களின் பொறுப்பாகும். பொறுப்புகள் உணரப்படவில்லை. இலங்கையிலே, ஒன்பது மாகாணங்களிலும் 50க்கும் மேற்பட்ட நூதனசாலைகள் இருக்கின்றன. இதைவிடத் தொல்பொருள் திணைக்களத்தின் வசம் நாடுமுழுவதும் கட்ட, மர நாணய, உலோக, புதையல் படிமங்கள் என ஏராளமான ஆதாரங்கள் உண்டு. இது பற்றிய விழிப்புணர்வும் அக்கறையும் இலங்கையரிடத்தே காலத்தினால் வேண்டப்படுகிறது. இதைவிட பல்கலைக்கழகங்கள், கல்விச் சாலைகள், தனிப்பட்டவை என இருபதுக்கும் மேற்பட்டவையும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் நாவலர் வீதியில், ஆறுமுகநாவலர் நூதன சாலையும், வவுனியாவில் ஒரு நூதனசாலையும், அரச சார்பற்ற நூதன சாலைகள் மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. தேவையான சுருக்கக் குறிப்புக்களுடன் புராதன யாழ்ப்பாணத்தின் சுவடுகள், சுவடிகள், ஏடுகள், சின்னங்கள், ஆபரணங்கள், சிலைகள், கல்வெட்டுக்கள், யுத்த ஆயுதங்கள், மண்பானைகள், நாணயங்கள், விளக்குகள், பல்லக்கு, சிறைச்சாலை உபகரணங்கள், விலங்குகள், கருங்கல் சாதனங்கள், உலோகச் சிற்பங்கள், மரச்சிற்பங்கள், சிம்மாசனம், வாத்தியக் கருவிகள், பட்டைகள் சீலாப்பட்டை, உமல், சூத்திரம், குவளைகள், குடுவைகள், தேர்ச்சிற்பங்கள், மான் கொம்பு, அலங்கார வடிவம், தந்தங்கள், கரத்தை வண்டில், கூடார வண்டில், போர்த்துக்கேய, ஒல்லாந்து, ஆங்கிலேய ஆட்சி மீதங்கள், மன்னர் முடி, அரசவாள், மருத்துவ சாதனங்கள், நாவலர் வாழ்ந்த இருப்பிடங்கள், அவர் உபயோகித்த பொருள்கள் என ஏராளமான அரிய பொக்கிஷங்கள் நாவலர் நூதனசாலையில் உள்ளன. நாவலரின் வீட்டினது எஞ்சிய சுவரினைத் தொட்டுக் கும்பிட்டுப் புண்ணியத்தைச் சேகரியுங்கள். பலர் இதனை அனுபவிக்கவில்லையே!

# மலையக எழுத்தாளர் மல்லிகை குமார் மறைவு

மேமன்கவி






மலையக எழுத்தாளர் மல்லிகை குமார் நேற்றுமுன்தினம் காலமானார். கொடகே புத்தக நிறுவனம் நடத்தும் கையெழுத்துப் போட்டிக்கு அனுப்பப்பட்ட கையெழுத்துப் பிரதிகளில் சிறந்த சிறுகதைப் பிரதியாக அவரது வேடத்தனம் சிறுகதைத் தொகுப்பு தெரிவு செய்யப்பட்டு நூலாக அச்சடிக்கப்பட்டு முடிந்த நிலையில் எதிர்வரும் பெப்ரவரி 13ஆம் திகதி கொழும்பில் கொடகே நிறுவனத்தினரால் நடத்தப்படும் பரிசளிப்பு விழாவில் அவருக்கான விருது வழங்கப்பட இருந்த காலகட்டதில் அவர் எம்மைப் பிரிந்து விட்டார். அவருடன் அந்தப் புத்தகத்துக்கான அட்டைப்படம் என்னால் அனுப்பப்பட்ட தருணத்தில்தான் அவருடன் இறுதியாக நான் பேசினேன். அந்த கையெழுத்துப் பிரதிக்கான விருதும் அந்தப் பிரதி நூலாக வெளிவரப் போகிறது என்ற செய்தியும் அவருக்கு மகிழ்ச்சி அளித்திருந்தது என்பதை அந்த உரையாடலில் மூலம் தெரிந்து கொண்டேன். அவரது மறைவு இந்த நூலுக்காக உழைத்த நண்பர் கே.பொன்னுத்துரைக்கும் அவரது உறவினர் எழுத்தாளர் மு.சிவலிங்கம் மற்றும் எனக்கும் பெரும் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. அவரது படைப்பு விருது பெற்றிருப்பதும் அது நூலாக வெளிவரும் ஏற்பாடு கணிசமான அளவில் முடிந்து விட்டது என்ற ஆத்ம திருப்தியுடன் எம்மை விட்டு அவர் பிரிந்து இருக்கிறார். மலையக இலக்கியவாதிகளில் ஒரு தொழிலாளியாக வாழ்ந்து மலையகத்தின் யதார்த்தத்தைத் தன் எழுத்துகளில் எமக்கு விட்டுச் சென்று இருக்கிறார். மலையக மக்கள் இலக்கியத்தின் வரலாற்றில் முன் முகமாக என்றும் அவர் வாழ்வார்.

# "தவப்பேறுதந்த தெய்வமகள்" அமரர் திருமதி குலமணி

கருடன்

அன்னை சிவப்பேறடைந்த செய்தி அறிந்து நாம் கவலையடைகின்றோம்.

புண்ணிய ஆத்மாக்கள், தேவருலகில் இப்பொழுது பூத்திருப்பர் என்ற நம்பிக்கையே நம்மை விடுதலையாக்குகின்றது.

"ஓயாமல் ஓராண்டு
ஒருங்கே சுமந்து பெற்று
காயாமல் நனையாமல்
காத்து வளர்த்த தெய்வம்" ஆம்!

தமிழன்னைக்கு வாய்த்த தெய்வமகள் ஆகையால், தாரணியில் 'ஜெயராஜ்" என்ற தமிழமுதினை உபகாரமாக்கினார்.

சம காலத்தில் உலகிலே தமிழுக்கும் தவத்திற்கும் ஒரு தலைவனை வரமாக்கியுள்ள குலமணியாக விளங்கிய கலைமகளே குலமணி இலங்கராஜா ஆவார்.

பீடுடைய பிரம்மாவும் நீடு வாழும் படி தயைபுரிந்தமையால் 96 வயதுவரை தமிழோடு இசை பாடும் படியாக, சிவமோடு ஐஸ்வரியங்களைவணங்கும்படியாகஅன்னை பேறு கொண்டார்.

கம்பராமாயணம் எனும் கடலில் முத்துக் குளித்து அதனை இந்த மண்ணுக்கே கொடையாகும்படி தாற்பரியம் பெற வாய்ப்புளித்த தயாபரியை நாம் சிரம்தாழ்த்தி அஞ்சலி செய்கின்றோம்.

இந்திய இலங்கைப் பேராசிரியர்கள் தொடக்கம், பாமரர்கள் வரை தமிழினை இனிக்கவும் வணங்கவும் செழிக்கவும் கொழிக்கவும் கொய்யவும் செய்கின்ற கைங்கரியத்தினைக் கம்பவாரிதி ஆற்றுவதற்குக் கருவிலே அறிவூட்டியவர் அவரது அம்மா குலமணியாவார். சீரும் சிறப்போடு, பேரும் புகழோடு, ஆரும் பெறாத அறிவு பெற்று, ஊரெல்லாம் பெயர் சொல்ல, உணர்வெல்லாம் தமிழொலிக்க, பாரெல்லாம் பணிந்திடப் பரம்பொருளானாய் அம்மா! சாந்தியடைவீர்களாக!



# இன்றைய நாள்

**மேடம்:** இஷ்ட தெய்வ அனுக்கிரகம் பெறுவீர்கள். வெகுநாள் மனதில் இருந்த சஞ்சலம் தீரும். அதிக உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணப்பரிவர்த்தனை சீராகும்.

**இடபம்:** அவமதித்தவர் அன்பு பாராட்டும் சூழல் உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** செயல்களில் சீர்திருத்தம் தேவைப்படும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது.

**கடகம்:** பணி நிறைவேற பொறுமை அவசியம். தொழிலில் உள்ள குறைகளை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். வரவை விட செலவு அதிகரிக்கும். அரசு தொடர்பான அனுகூலம் தாமதமாகலாம். தெய்வ வழிபாட்டால் சாந்தகுணம் வளரும்.

**சிம்மம்:** பிறர் பாராட்டும் வகையில் செயல்படுவீர்கள். புதிய திட்டத்தால் தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும், கூடுதல் பணவரவு கிடைக்கும். வாகனத்தில் சில மாற்றம் செய்வீர்கள்.

**கன்னி:** உறவினரின் அன்பு, ஆதரவு கிடைக்கும். தாமதமான பணியை புதிய உத்தியால் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். உபரி பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** நற்செயலுக்கான பாராட்டு வந்து சேரும். மனதில் உற்சாகம் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்தி பயன்படும். அளவான பணவரவு கிடைக்கும். ஒவ்வாத அழகு சாதனப் பொருட்களை தவிர்ப்பீர்.

**விருச்சிகம்:** மனதில் சஞ்சலம் ஏற்படலாம். தொழிலில் கூடுதல் உழைப்பினால் உற்பத்தி, விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும். உணவுப் பொருள் வாங்குவதில் கவனம் தேவை.

**தனுசு:** பரந்த மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். புதியவர்களின் அன்பு, உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க மாற்று உபாயத்தை பின்பற்றுவீர்கள்.

**மகரம்:** நண்பரை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். பொறுமையுடன் செயல்படுவதால் சிரமம் விலகும்.

**கும்பம்:** சிறு பணியையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள்.

**மீனம்:** எவரிடமும் தற்பெருமை பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள இடையூறை தாமதமின்றி சரி செய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்.

# கொரோனா தாண்டவம்



## கணிக்கத் தவறினோம் என சுகாதார அமைப்பு மன்னிப்பு

**நியூயோர்க், ஜன. 29**

**கொடிய கொரோனா வைரஸ் பாதிப்பால் சீனா வில் மட்டும் 106 பேர் உயிரிழந்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் துரித கதியில் 18 நாடுகளுக்கு கொரோனா பரவியுள்ளது.**

**4,577**
பாதிக்கப்பட்டோர்

**106**
இறந்தோர் எண்ணிக்கை

| நாடுகள் | பாதிக்கப்பட்டோர் | இறந்தோர் |
|---|---|---|
| சீனா | 4,515 | 8 |
| கொங்கொங் | 8 | 0 |
| மக்காவு | 5 | 0 |
| ஆஸ்திரேலியா | 5 | 0 |
| கம்போடியா | 1 | 0 |
| கனடா | 1 | 0 |
| பிரான்ஸ் | 3 | 0 |
| ஜேர்மனி | 1 | 0 |
| ஜப்பான் | 4 | 0 |
| மலேசியா | 4 | 0 |
| நேபாளம் | 1 | 0 |
| சிங்கப்பூர் | 5 | 0 |
| தென் கொரியா | 4 | 0 |
| இலங்கை | 1 | 0 |
| தாய்லாந்து | 8 | 0 |
| தைவான் | 4 | 0 |
| அமெரிக்கா | 5 | 0 |
| வியட்நாம் | 2 | 0 |

இதையடுத்து கொரோனாவைக் கணிக்கத் தவறியமைக்காக மன்னிப்புக் கேட்டுள்ளது உலக சுகாதார நிறுவனம்.
சீனாவிற்கு வெளியே மொத்தம் 17 நாடுகளில் தற்போது கொரோனா வியாதி பாதிப்புகள் குறித்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. கம்போடியாவிலும் கொரோனா வைரஸ் பாதிப்பை கண்டறிந்துள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. மேலும் இலங்கையில் சீன நாட்டவர் ஒருவர் கொரோனா பாதிப்புக்கு உள்ளானதாக அறிவிக்கப்பட்டுள் ளது. சீன தலைநகர் பீஜிங்கில் உள்ளூர் நேரப்படி இரவு 8 மணிக் குக் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த 50 வயது நபர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இதனிடையே இங்கிலாந்து விஞ்ஞானி கள் குழு ஒன்று சீனாவில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கவலை தெரிவித்துள்ளது. அதுமட்டுமின்றி அவர்களில் பலரும் தாங்கள் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ளமையை தெரியாமல் இருக்கிறார்கள் என தெரிவித்துள்ளனர். கொரோனா பாதிப்பு மற்றும் இறப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்க அதிக வாய்ப்பு இருப்பதாகவும் இங்கிலாந்து விஞ்ஞானி கள் கணித்துள்ளனர். (ம)



# அமெரிக்க விமானத்தை வீழ்த்தினர் தலிபான்கள்

காபூல், ஜன. 29
ஆப்கானிஸ்தானில் வீழ்ந்து நொறுங்கிய அமெரிக்க போர் விமானத்தை நாங்கள்தான் சுட்டு வீழ்த்தினோம் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.
ஆப்கானிஸ்தானில் தலிபான் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதியில் விமானம் ஒன்று நொறுங்கி விழுந்தது. ஆப்கானிஸ்தான் நாட்டின் காஜினி மாகாணத்தின் தேயாக் பகுதியில் அமெரிக்க ராணுவத்தின் கண்காணிப்பு விமானம் நேற்றுமுன்தினம் மதியம் நொறுங்கிக் கிடந்தது.
விமானம் நொறுங்கி கிடந்த இடம் தலிபான் பயங்கரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். இந்த விமானத்தில் அமெரிக்க உளவுப்படையை சேர்ந்த முக்கிய அதிகாரிகள் இருந்தனர். விமானம் நொறுங்கியதில் 9 பேர் வரை பலியாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் அமெரிக்க ராணுவ விமானம் நொறுங்கி விழுந்ததற்கு தலிபான்கள் தான் காரணம் என்று தெரியவந்துள்ளது. அமெரிக்க போர் விமானத்தை நாங்கள் தான் சுட்டு வீழ்த்தினோம் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். (ம)

# கொரோனா வைரஸை சமாளிக்க அனைத்து வளங்களும் உள்ளன

*சீன அரசு அறிவிப்பு*

பீஜிங், ஜன. 29
கொரோனா வைரஸை சமாளிக்க எல்லா வளங்களும் சீனாவிடம் உள்ளன என்று அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ தெரி வித்துள்ளார்.
சீனாவில் சீனாவின் ஹுபெய் மாகாணத்தின் தலைநகரான வூஹானில் கடந்த சில நாள்களுக்கு முன்பு மர்மக் காய்ச்சல் காரணமாக இருவர் உயிரிழந்தனர். இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டபோது, அவர்களுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருந்தது தெரியவந்தது.
கொரோனா வைரஸ் சீனாவில் வேகமாக பரவி வருகிறது. இந்த நிலையில் வைரஸ் காரணமாக பலி எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வுருகிறது. தற்போது சீனாவில் கொரோனா வைரஸ் காரணமாக பலியானவர்கள் எண்ணிக்கை 106ஆக அதிகரித்துள்ளது. சுமார் 4 ,577 பேர் இந்த வைரஸ்தாக்குதலால்பாதிக்கபட்டுள்ளனர்என சீன சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் கொரோனா வைரஸ் தொடர்பாக நடந்த கூட்டத்தில் சின வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ பங்கேற்றார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வாங் யீ கூறும்போது, 'கொரோனா வைரஸை எதிர்கொள்ள அனைத்து வளங்களும் சீனாவிடம் உள்ளன' - என்றார். (ம)

## நீதித்துறைக்குள்...

ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு எதிராக, அரசமைப்பை மீறிய செயற்பாட்டுக்காக நாங்கள் விரைவாக சட்ட நடவடிக்கை எடுப்போம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட மற்றும் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க ஆகியோருக்கு எதிரான விசாரணையை இடைநிறுத்துமாறு சட்ட மா அதிபருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை வழங்கியுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக பதவி துறந்த அல்லது நடவடிக்கைகளுக்கு உள்பட்ட அரச ஊழியர்கள், அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் துணை அரச நிறுவனங்களின் பணியாளர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவே இந்தப் பரிந்துரையை சட்ட மா அதிபருக்கு வழங்கியுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

**முன்னரே தெரியும்**

இது தொடர்பான வழக்கு அண்மையில் நீதிமன்றுக்கு வந்தது. அந்த வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி சார்பில் முன்னிலையான எதிர்தரப்புச் சட்டத்தரணிகள், எதிரிகளுக்கு இன்றைய தினம் குற்றப்பத்திரத்தை வழங்க வேண்டாம் என்றும், இது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை விடுக்க இருக்கின்றது என்றும் நீதிமன்றில் தெரிவித்தனர். ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை அவர்களுக்கு முன்னரே தெரிந்துள்ளது. ஆனால் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. பிணையில் விடுவிக்கப்பட்ட வசந்த கரனகொட மன்றில் அன்றைய தினம் முன்னிலையாகச் சொல்லியும் வரவில்லை. நீதிமன்றம் இவ்வாறான சந்தர்ப்பங்களில் வழமையாக பிடியாணை பிறப்பிக்கும். ஆனால் அவருக்கு எதிராக அறிவித்தல் வழங்கப் பணித்தது. இந்த விடயம் நீதிமன்றத்தைப் பொறுத்தது.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட மற்றும் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க ஆகியோருக்கு எதிரான விசாரணையை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி ஆணைக்குழு இரண்டு நாள்களுக்கு முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது மிக மோசமான அரசியல் தலையீடு. சட்டமா அதிபர் திணைக்களம் சுயாதீனமானது. சட்டமா அதிபர் முன்னெடுத்த வழக்கை ஜனாதிபதி ஆணைக்குழு ஊடாக தடுக்க முயற்சி எடுக்கப்படுகின்றது.

**ஒரு வழக்குக்கும் இந்த நிலையா?**

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் பரந்தது. படையினரிடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பலர். பல விடயங்கள் இவ்வாறு இருந்தாலும், ஒரு வழக்கு மாத்திரமே சர்வதேச சமூகத்தின் கண்துடைப்புக்காக விசாரிக்கப்பட்டு வந்தது. அப்படி முன்னெடுக்கப்பட்ட ஒரு விடயமும் சரியாக நடக்கின்றதா என்பதை அவதானித்து வந்தோம்.

இந்தக் கடத்தல் கோத்தாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த போதே நடந்தது. இப்போது அவர் ஜனாதிபதி.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது அநுராதபுரத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய கோத்தாபய, ஜனாதிபதியாகப் பதவியேற்ற மறுநாளே, இப்படியான சம்பவங்களில் கைது செய்யப்பட்டு சிறையிலுள்ள படையினரை விடு விப்பேன் என்று கூறியிருந்தார். அவர் பதவியேற்ற மறு நாள் இவ்வாறு நடக்காவிட்டாலும், இப்போது அதற்கான செயன்முறையதான் நடக்கின்றது.

இந்தச் செயற்பாடு நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிக்கும். இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இல்லாவிடின் நாம் வழக்குத் தாக்கல் செய்வோம்.

நீதிமன்றில் இருக்கும் விடயம் சம்பந்தமாக தலையீடு செய்வது சட்டவிரோதமானது. அதுவும் குற்றப் பத்திரிகைகள் கையளிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றின் கையில்தான் இருக்கவேண்டும். நீதிமன்றின் சுயாதீனத்தை தடுப்பதான இந்தச் செயற்பாட்டை அனுமதிக்க முடியாது.

**சட்ட வரம்பை மீறிய சட்டமா அதிபர்**

சட்டமா அதிபரின் சில செயற்பாடுகள் சட்ட வரம்பை மீறியதாகவே அமைந்துள்ளது. இலங்கை வரலாற்றில், ஒருவரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் இது வரை ஆலோசனை, பணிப்பு வழங்கியதில்லை. இப்போதுள்ள சட்டமா அதிபர் இவ்வாறான பணிப்புக்கள் பலவற்றை வழங்கியுள்ளார். ஒருவரைக் கைது செய்வதா இல்லையா என்பதை அவரைக் கைது செய்யச் செல்லும் பொலிஸ் அதிகாரியே தீர்மானிக்க வேண்டும், என்றார். (ஒ,5,20,26)

## விக்னேஸ்வரனோடு...

தெரிவித்தார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் ஊடாக ஐங்கரநேசன் போட்டியிடவுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், அந்தக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோருடன் தனிப்பட்ட ரீதியில் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றேன். மாகாண சபையில் எனக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளின் போது என்னைப் பதவியிலிருந்து நீக்குவது பொருத்தமானது அல்ல என்று விக்னேஸ்வரனிடம், சித்தார்த்தன் பல தடவைகள் வலியுறுத்தியுள்ளார். இந்தத் தொடர்புகள் யாவும் அரசியல் ரீதியானவை அல்ல. ஆனாலும் எங்களுக்கு இடையில் தொடர்புகள் இருக்கின்றன.

புளொட்டுக்கு ஊடாக கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகக் கேட்டு சித்தார்த்தனுடன் நான் பேசினேன் என்றோ அல்லது அவர் கொழும்பில் இருப்பதால் வந்து பேசுவதாகச் சொல்லியோ வெளியான செய்திகளில் உண்மையில்லை. இது உள்நோக்கம் கருதி இட்டுக்கட்டப்பட்ட வதந்தி.

அரசியல் கூட்டு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பான எனது கருத்து நிலைப்பாட்டின் காரணமாக, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடனான கூட்டணியில் நான் இடம்பெறுவது சாத்தியமற்றதாகவே கருதுகின்றேன்.

விக்னேஸ்வரனுடன் எனக்கு எவ்விதமான தனிப்பட்ட முரண்பாடுகளும் இல்லை. அதே போன்றே அவருக்கும் என்னுடன் தனிப்பட்ட முரண்பாடுகள் எவையும் இல்லை. அரசியல் கடந்து இருவருக்கும் இடையிலான அன்பு சார்ந்த உறவு நீடிக்குமென்றே கருதுகின்றேன், என்றார். (ஒ,5,20)

## விக்கி...

தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் மே மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்று தீர்மா னித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான மஹிந்த சமயவர்த்தன, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே விசாரணைக்கான திகதி தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்குச் சட்டத்துக்கு முரணானது என்று அவர் தரப்பில் முன்வைக் கப்பட்ட ஆட்சேபனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே நிராக ரித்திருந்தது.

வழக்குக்கான விசாரணைத் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் வழக்கின் 2ஆம் பிரதிவாதியான அனந்தி சசிதரனின் சட்டத்தரணி வழக்கில் இருந்து விலகிக் கொள்வதாக இடையீட்டு மனுவின் ஊடாக அறிவித்திருந்ததை அடுத்து நேற்று மீளத் திகதியிடப்பட்டுள்ளது. (எ)

## காயங்களுடன்...

டுள்ளது.

நாவற்குழி, கோயிலாக்கண்டியைச் சேர்ந்த பூபாலசிங்கம் நந்தகுமார் (வயது -37) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் மாலை நண்பருடன் வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். இரவு 9.40 மணியளவில் கோயிலாக்கண்டிச் சந்திக்கு அருகில் காயங்களுடன் அவர் காணப்படுகின்றார் என்று குடும்பத்தினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்கள் அவரை மீட்டு இரவு 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் நேற்று மேற்கொண்டார்.

வாகனம் ஒன்றின் சக்கரம் ஏறியதால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று உடற்கூற்றுச் சோதனையில் கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-2,69)

## சர்வதேச...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முழுமையான சர்வதேச விசாரணை நடத்தப்பட்டது. அது ஒரு பகுதி. அந்த அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகள் செய்யப்படவேண்டும். அது சாத்தியமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டில் சிலரைக் குற்றவாளியாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால், அந்த நாட்டுடன் இணைந்துதான் செயற்படுத்த வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த முடியாது. அந்த நாட்டுடன் இணையாமல் செயற்படுத்தப்படும் எந்தவொரு நடவடிக்கையாலும், குற்றவாளிகளைத் தண்டிக்க முடியாது.

அதற்காகத்தான் 2015ஆம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில், கலப்பு நீதிமன்ற பொறிமுறையை உள்ளடக்கிய தீர்மானம் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசை இதனைச் செய்விப்பதற்கான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபையால் இலங்கைக்கு கால நீடிப்போ, அவகாசமோ தீர்மானத்தைச் செயற்படுத்த வழங்கப்படவில்லை. இலங்கை மீதான ஐ.நாவின் மேற்பார்வை நீடிப்பே வழங்கப்பட்டது- என்றார். (ஒ,5)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.இ. சி. பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் குமரன் விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொட்டடி முத்தமிழ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



# கிண்ணம் வென்றது துறையூர் ஐயனார்

யாழ்ப்பாணம்.ஜன.29

புங்குடுதீவு இறுபிட்டி சனசமூக நிலையமும் மற்றும் இறுப்பிட்டி விளையாட்டுக் கழகமும் இணைந்து 70ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி தீவக கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்திய கால்பந்தாட்ட போட்டித் தொடரில்வேலணை துறையூர் ஐயனார் விளையாட் டுக் கழக. அணி கிண்ணம் வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுப்பிட்டி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் வி்ளாயாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரு அணிகளும் எதுவித கோல்களை பதிவு செய்யாது போக முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி வீரர் அகீபன் அணிக்கான முதாவது கோலை பதிவு செய்தார். மேலதிக கோல்கள் பதிவு செய்யாது போக ஆட்டம் முடிவுக்கு வர இறுதியில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

சிறந்த விளையாட்டு வீரராக வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி வீரர் ரமேஸ்தெரிவானார்.சிறந்த கோல் காப்பாளராக வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியின் கோல் காப்பாளார் ஜாந் தெரிவு செய்யப்பட்டார்.(23)



எல்லே போட்டியில்

## மகுடம் சூடியது அதிசயம் வி.க.

யாழ்ப்பாணம்,ஜன.29

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான எல்லே போட்டித் தொடரில் அதிசயம் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

கடந்த சனிக்கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிபதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் தனது முதல் இன்னிங்ஸுக்காக விளையாடிய சிறிபதி விளையாட்டுக் கழக அணி 30 பந்துகளில் ஓர் ஓட்டத்தைப்பெற்றது. அதனை அணி வீராங்கனை பவித்திரா பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸுக்காக விளையாடிய அதிசயம் விளையாட்டுக் கழக அணி 10 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்று கிண்ணத்தை வென்றது. அணி சார்பில் சாதனா, வினித்தா தலா ஒவ்வொரு ஓட்டத்தைப் பெற்றுக் கொடுத்தனர்.(23)

## காலிறுதியாட்டம் நாளை

காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டம் நாளை வியாழக்கிழமை முதல் திக்கம் இளைஞர் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் 4 மணிக்கு அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. (422)

## வலைப் பந்தாட்டத்தில் அதிசயம் வி.க. சம்பியன்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அதிசயம் விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றனர்.

கடந்த சனிக்கிழமை பளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அதிசயம் விளையாட்டுக் கழக அணி 15.04 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)



## மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம், ஜன.29

கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மை விளையாட்டுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அ.நிருப ராணயும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மோர்க்கண்டைல் பாதுகாப்புச் சேவை பணிப்பாளர் வி.சுகுமார் பழைய மாணவரும் மின் ஒப்பந்தகாரருமான வே. சுபாஸ்கரன் பழைய மாணவி திருமதி அனுசியா சுபாஸ்கரன், யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித் துறை மைதான அலுவலர் இ.குகதாஸ், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (159)



## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் மயிலிட்டி வானவில் விளையாட்டுக்கழக அணிக்கும்,கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மயிலிட்டி வானவில் விளையாட்டுக் கழக அணி 6:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

அறிவொளி விளையாட்டுக் கழக அணிக்கும், மயிலிட்டி திருக்குடும்பம் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் திருக்குடும்பம் விளையாட்டுக்கழக அணி 7:1என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும், சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி 11:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும், சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 16:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்.ஜன.29

யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.பி.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அணி சார்பில் தினேஷ்குமார், கெயின்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்தனர். (23)

## நல்லூர் பிரதேச செயலக பிரிவு பூப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.29
நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப் பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான பூப்பந்தாட்ட குழு ஆட்டத்தில்



வை.எம்.எச்.எ விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கத்தையும்,கல்வியங்காடு சம்பியன் விளையாட் டுக் கழக அணி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்ற னர்.



பெண்களுக்கான பூப்பந் தாட்ட தனிநபர் போட்டியில் வை.எம்.எச்.எ விளையாட் டுக் கழக அணி வீராங் கனை எஸ். சங்கவி தங்கப் பதக்கம் பெற்றார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் வை.எம்.எச்.எ. விளையாட் டுக் கழக அணியை பிரதி நிதித்துவப்படுத்தி விளையா டிய எஸ்.சங்கவி தன்னை எதிர்த்து விளையாடிய கல்வியங்காடு சம்பியன் விளையாட்டுக் கழக அணியை பிரநிதித்துவப்படுத்தி விளையாடிய கயிந் திரியை 2:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

பெண்களுக்கான பூப் பந்தாட்ட இரட்டையர் ஆட்டத்தில் வை.எம். எச்.எ விளையாட்டுக் கழக அணி வீராங்க னைகளான பி.தமி ழினி, என்.டிலக்சனா இணைதங்கப் பதக் கம் வென்றனர்.



ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் வை.எம்.எச்.எ விளை யாட்டுக் கழக அணியைப் பிரநிதித்துவப்படுத்தி விளையாடிய பி.தமிழினி, என். டிலக்சனா இணை தங்களை எதிர்த்து விளையாடிய கல்வியங்காடு சம் பியன் விளையாட்டுக் கழக அணியை பிரநிதித்து வப்படுத்தி விளையாடிய டி.சுகானி, டி.விஷானி இணையை 2:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றனர். (23)



## கரப்பந்தாட்டப் போட்டியில் இளந்தளிர் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம்,ஜன.29
கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங் களுக்கு இடையிலான நடப்பாண்டுக் கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்களுக்கான கரப்பந்து போட்டியில் கட்டைக்காடு இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி தங்கப்பதக்கம் வென்றது.
கடந்த வியாழக்கிழமை கண்டாவளை ரூபன் விளையாட்டுக்கழக மைதானத் தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கட் டைக்காடு இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோரக்கன்கட்டு விளைபூமி விளையாட்டுக்கழக அணி மோதியது. 3செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் கட் டைக்காடு இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றி யது. (23)

## எல்லே போட்டி ஞாயிறன்று

சாவகச்சேரி,ஜன.29
தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்க ளுக்கிடையிலான போட் டிகள் நடைபெற்று வரு கின்றன.
அந்த வகையில் எதிர்வ ரும் ஞாயிற்றுக்கிழமை ஆண், பெண் இருபாலா ருக்குமான எல்லே போட் டிகளும் பெண்களுக் கான வலைப்பந்தாட்டப் போட்டிகளும் நடைபெற வுள்ளன.
ஆண்களுக்கான எல்லே போட்டிகள் கைதடி சரஸ் வதி மைதானத்திலும், பெண்களுக்கான எல்லே மற்றும் வலைப் பந்தாட்டப் போட்டிகள் சாவகச்சேரி டிறிபேக் கல் லூரி மைதானத்திலும் நடைபெறும். (9)

## அசத்தியது சென் ஜேம்ஸ்

யாழ்ப்பாணம்,ஜன.29
பூநகரி கால் பந்தாட்டம் லீக்கின் அனுமதியுடன் நாச்சிக்குடா குழந்தை யேசு விளையாட்டு கழ கம் 25ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றிய' மகிமையின் கிண்ணம்' கால்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நாச் சிக்குடா சென் ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென் றது.



நாச்சிக்குடா குழந்தை யேசு விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாச்சிக்குடா அல் ஜின்னா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென் .ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்ட நேர முடி வில் நாச்சிக்குடா சென் ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.
சிறந்த ஆட்ட நாயகனாக ஜின்னா விளையாட்டுக்கழக அணி வீரர் அர் சாத் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக சென்.ஜேம்ஸ் விளை யாட்டுக் கழக அணியின் கோல் காப்பாளார் அன்ரனி தெரிவானார். (23)




## அரியாலை ஐக்கிய வி.க. தங்கப் பதக்கம் வென்றது

யாழ்ப்பாணம்.ஜன.29
நல்லூர் பிரதேச செயலக பிரி வில் பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையி லான நடப்பாண்டுக்கான விளை யாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான வலைப்பந் தாட்டத் தொடரில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கம் வென் றது.
நேற்றுமுன்தினம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன் றிலில் இடம்பெற்ற இறுதியாட்டத் தில் அரியாலை ஐக்கிய விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிகலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட் டுக் கழக அணி 28:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று தங்கம் வென்றது. (23)




# முதல் இன்னிங்ஸில் சிம்பாப்வே ரன் குவிப்பு



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிம்பாப்வே அணி 406 ரன்கள் குவித்துள்ளது.

இலங்கை அணி சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டியை இலங்கை அணி கைப்பற்றி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்க இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 6 விக்கெட்டை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து அணி நேற்றைய நாளுக்காகக் களமிறங்கி 406 ரன்களைக் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அணி சார்பில் அணித் தலைவர் வில்லியம்ஸ் சிறப்பாக ஆடி 107 ரன்களையும், சிகண்டர் ரசா 72 ரன்களையும், ரெயிலர் 62 ரன்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் எம்புல்டினியா 4 விக்கெட்டையும், தனஞ்செய 3 விக்கெட்டையும், லக்மல் 2 விக்கெட்டையும், குமார ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கருணரத்னே, பெர்னாண்டோ களமிறங்கினர். இருவரும் இணைந்து அணிக்கு நல்லதொரு இணைப்பாட்டத்தை வழங்கினர். அணி 94 ரன்களைப் பெற்ற போதே முதலாவது விக்கெட் சரிக்கப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் 44 ரன்கள் பெற்று தமது அரைச் சதத்தைத் தவறவிட்டு ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். அணி நேற்றைய நாள் முடிவில் 2 விக்கெட்டை இழந்து 122 ரன்களைப் பெற்றது. குசல் மென்ரிஸ் 19 ரன்களுடனும், மத்தியூஸ் 4 ரன்களுடனும் களத்திலுள்ளனர்.

## டோனியின் ஆசனத்தில் எவரும் இருப்பதில்லை

### சாஹல் உருக்கம்

இந்திய அணி பயணிக்கும் பஸ்சில் டோனியின் இருக்கையில் தற்போது யாரும் அமருவது கிடையாது. அவரை நாங்கள் இழந்தது போல உணர்கின்றோம் என சுழற்பந்து வீச்சாளர் யுவேந்திர சாஹல் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்திய அணி 5 ரி-20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள், 2 டெஸ்டில் விளையாடி வருகின்றது.

இந்த நிலையில், இன்று இடம்பெறும் 3ஆவது ரி-20 போட்டியில் பங்கேற்க இந்திய அணி வீரர்கள் பஸ் மூலமாக ஹாமில்டன் நகருக்கு சென்றனர்.

வீரர்கள் பஸ்சில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சுழற்பந்து வீச்சாளர் யுவேந்திர சாஹல் சக வீரர்களிடம் கேலி கிண்டலுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது போன்ற ஒரு வீடியோவை பிசிசிஐ தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோவில் அணி வீரர்கள் பும்ரா, கேஎல் ராகுல், ரிஷப் பண்ட், கோலி உள்பட ஒவ்வொருவருடனும் சாஹல் உற்சாகமாக பேசி மகிழ்ந்தார்.

வீடியோவின் இறுதியில் மகேந்திர சிங் டோனி வழக்காமாக அமர்ந்திருக்கும் பஸ்சின் கடைசி யன்னலோர இருக்கைக்கு அருகே அமர்ந்த சாஹல், "இது தான் 'லெஜெண்ட்' டோனி பஸ்சில் வழக்கமாக அமர்ந்திருக்கும் இருக்கை. தற்போது இதில் யாரும் அமர்வது கிடையாது. நாங்கள் அவரை மிகவும் இழந்துள்ளோம்" என்று தெரிவித்தார்.

உலகக் கிண்ண தொடரில் நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்த பின்னர் டோனி எந்த சர்வதேச போட்டிகளிலும் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## ரோஜர் பெடரர் அரையிறுதிக்குள்



தைப்பொங்கலை முன்னிட்டு
A4 இரண்டு பக்கங்கள் போட்டோ கொப்பி 2/=
தமிழ் மற்றும் ஆங்கிலம் Typing செய்து கொடுக்கப்படும்.
LUXON ENTERPRISE
No 77B, Kandy Road, Jaffna.
T.P.No:0774115335 Fax No: 021 222 5335
வெளிநாடுகளுக்கான கடிதங்கள் பொதிகள் சேவை
11kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் நடைபெற்று வருகின்றது.

இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரி



ரிக்கா வீரர் டென்னிஸ் சாண்ட்ரென் மோதினர்.

இதில் தரவரிசையில் 3ஆம் இடத்தில் உள்ள ரோஜர் பெடரர் 6:3, 2:6, 2:,6 7:6 6:3 என்ற செட் கணக்கில் அமெரிக்க வீரர் டென்னிஸ் சாண்ட்ரெனை வெளியேற்றி அரை யிறுதிக்கு முன்னேறினார்.

ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ்